padippakam

# கொந்தளிப்பு

இதழ் 40 அக்டோபர் 1991

THOONDIL
Südasien Büro
Große Heimstr. 58
4600 Dortmund 1



உள்ளே...


- கொந்தளிக்கும் உலகில்...
- எனது சோகமான முகம்...
- சலுகைகள் பறிபோய் விடுமா?
- தோட்டத் தொழிற்சங்கங்களின்...
- உள்ளூராட்சி தேர்தல் முடிவு...
- தொலைக் கல்வி என்றால்...


படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

THOONDIL
Südasien Büro
Große Heimstr. 58
4600 Dortmund 1

# கொந்தளிக்கும் உலகில் கொந்தளிக்க முடியாத "கொந்தளிப்பு"

நீண்ட இடைவெளியின் பின் வாசகர்களைக் 'கொந்தளிப்பின்' நாற்பதாவது இதழின் மூலம் சந்திப்பதில் பேருவகை கொள்கிறோம். 1976ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மலையகத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் ஒரே சஞ்சிகை என மார் தட்டிக் கொள்ள ஏனோ எமக்கு தயக்கமாக இருக்கிறது.

மலையகத்திலே, இலங்கையிலே, இந்தியாவிலே, உலகிலே அரசியல் கொந்தளிப்பில் அத்தனை பேரும் அமிழ்ந்து கொண்டிருக்கும் வேளையிலே 'கொந்தளிப்பு' இதுவரை மௌனக் கடலில் மூழ்கியிருந்தமை உடன்பாடில்லாத ஒரு செயலே ஆகும்.

அவ்வப்போது தலைகாட்டிவிட்டு அப்புறம் அமைதி காக்கும் நிலைக்கு கொந்தளிப்பு ஆசிரியர் குழு மட்டும் காரணமல்ல. நானூறு ஐநூறு சதவீதம் தமிழக விலையிலும் அதிகமாக இருப்பினும் இந்திய சஞ்சிகைகளை விலை கொடுத்து வாங்கிப் படிக்கும் வாசகர்களாகிய நீங்கள், கொந்தளிப்பு போன்ற சஞ்சிகைகளுக்கு ஆதரவு தர முன் வருவதில்லை. இலங்கையில் வெளியாகும் சஞ்சிகைகளை 'ஓசியில்' மட்டுமே படிப்பது என விரதம் அனுஷ்டிக்கும் வாசகர்கள் தங்கள் மனங்களில் மாற்றம் ஏற்படுத்திக் கொள்ளாத வரை உள்ளூர் சஞ்சிகைகள் நீடித்த ஆயுளைப் பெற முடியாது.

இனி ஒரு விதி செய்வோம். இலங்கை வெளியீடுகளை விலை கொடுத்து வாங்குவோம் என நீங்கள் சபதம் மேற்கொள்ளுங்கள். கொந்தளிப்பும் தொடர்ந்து வெளிவரும்.

இவ்விதழை அழகுற அச்சிட்டு உதவிய யுனிவர்சல் அச்சக உரிமையாளர், உதவியாளர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறோம். அடுத்த இதழ் சிறப்புற உங்கள் ஆக்கங்களை இப்போதே எமக்கு அனுப்பி உதவுங்கள்.

ஆ—ர்.

படிப்பகம்

padippakam

# வட இலங்கைச் சங்கீத சபை பரீட்சையில் பர்வதா நர்த்தனாலய மாணவிகள் சாதனை

அட்டன் கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பின் மலையக சேவைக் குழுவினரால் சனி–ஞாயிறு தினங்களில் அட்டனில் நடத்தப் படும் பர்வதா நர்த்தனாலய – பரத நாட்டிய வகுப்பில் பயிலும் மாணவிகள் சிறப்பான சித்திகளைப் பெற்றுள்ளனர்.

இந்த வகுப்பில் அட்டன், கொட்டகலை, தலவாக்கொல்லை, மஸ்கெலியா, பொகவந்தலாவ பகுதிகளைச் சேர்ந்த நூற்றிற்கும் மேற்பட்ட மாணவிகள் தற்போது பயின்று வருகின்றனர். திருமதி உமா பரத நாட்டிய வகுப்பின் ஆசிரியையாக சிறப்பாக பணிபுரிந்து வருகிறார்.

எதிர்வரும் அக்டோபரில் தங்கள் ஆண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடப் போகும் இம்மாணவிகள் சிலரின் படங்கள் கீழே தரப் பட்டுள்ளன.



நளினி - தரம் 2



பிரியதர்ஷினி - தரம் 2



ஜெயபவானி - தரம் 2



தர்ஷினி - தரம் 1



படிப்பகம்

padippakam



உதாரா சன்ஜிவினி - தரம் 1



சிவதர்ஷினி - தரம் 1



நிரோஷா குமுதினி - தரம் 1



ஜெயந்தி - தரம் 1



ஜெயபிரபா - தரம் 1



படிப்பகம்

padippakam

**தொலைக் கல்வி ஆசிரிய பாட நெறியின் அட்டன் ஹைலன்ஸ் ம. ம. வி. நிலைய இலக்கிய மன்றம் நடாத்திய போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்கள் விபரம்:**

பேச்சு: 1. பி. முத்துலிங்கம், 2. எஸ். சேகர், 3. ஆர். பிஸ்ருல் கரீமா.

தனிப்பாடல்: 1. பி. அசுந்தா, 2. எஸ். சிவதேவி, 3. பி. யோகேஸ்வரி.

தனி நடனம்: 1. கே. சண்முகவள்ளி, 2. என். கிருஸ்ணவேணி, 3. பி. ஜஸிந்தா.

சிறுகதை: 1. என். தியாகராஜா, 2. து. யோகேஸ்வரி, 3. எம். ஜேம்ஸ் விக்டர்.

கட்டுரை: 1. என். தியாகராஜா, 2. து. யோகேஸ்வரி, 3. ஜோர்ஜ் வில்சன்.

கவிதை: 1. து. யோகேஸ்வரி, 2. என். தியாகராஜா, 3. ஜேம்ஸ் விக்டர்.

குழுப்பாடல்: 1. பேர்பல் இல்லம், 2. மெரூன் இல்லம், 3. யெலோ இல்லம்.

குழு நடனம்: 1. மெரூன் இல்லம், 2. யெலோ இல்லம், 3. பேர்பல் இல்லம்.

நாடகம்: 1. வெளுக்குமா கிழக்கு வானம் (மெரூன் இல்லம்)
2. இனி ஒரு விதி செய்வோம் (பேர்பல் இல்லம்)
3. மாதொரு பாகன் (யெலோ இல்லம்)

விவாதம்: சினிமா பாடல்கள் இலக்கிய ரசனையைத் தரத் தவறி விட்டன. (பேர்பல் இல்லம் – ஒட்டிப் பேசியோர்).

அனைத்து போட்டிகளிலும் பேர்பல் இல்லம் கூடிய புள்ளிகள் பெற்று முதலாமிடத்தையும், சமமான புள்ளிகளைப் பெற்ற யெலோ, மெரூன் இல்லங்கள் இரண்டாமிடங்களையும் பெற்றன.



படிப்பகம்

padippakam

# பாஸிஸம்

## பாஸிஸம் என்றால் என்ன?

ஜனநாயகம், கம்யூனிசம் போன்ற கோட்பாடுகளைப் போன்று குறிப்பிட்ட சமூக, பொருளாதார, அரசியல் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு இக்கோட்பாடு தோன்றவில்லை. இதனால் பாஸிஸத்திற்கு அடிப்படையே இல்லை என்றும் கூறிவிட முடியாது.

''எல்லோரும் அரசுக்குள்ளே! யாரும் அரசிற்கு வெளியில் இல்லை! யாரும் அரசிற்கு எதிராகவும் இல்லை!'' என்பது பாஸிஸத்தின் அடிப்படையாகும். இக் கோட்பாட்டின்படி, தனிநபர் உயர்ந்த இலட்சியங்களை அரசுக்கு வெளியே அடைய முடியாது. எந்த மனித இலட்சியத்தையும் ஆத்மீக இலட்சியத்தையும் ஏன் சுதந்திரத்தையும் கூட அரசுக்கு வெளியே அடைய முடியாது. இந்த வகையில் பாஸிஸம் சர்வாதிகாரமே ஆகும்.

''தனியுரிமை முதலாளித்துவத்தின் இறுதி நிலையே பாஸிஸம்'' என்கிறார் மார்க்ஸ். அதாவது முதலாளித்துவத்தின் இறுதிக் கட்டம் ஏகாதிபத்தியம் ஆகும். எனவே தனியுரிமை முதலாளித்துவம் எடுக்கின்ற ஒரு உருவமான பாஸிஸத்தை 'சமூகத்திலுள்ள முதலாளித்துவ சிறு குழுக்களின் ஆட்சி' எனலாம்.

## ஜெர்மனியில் ஹிட்லர்!

முதலாம் உலகப் போரில் ஜெர்மன் அடைந்த தோல்வியும் இழந்த நாடுகளும் அதன் காரணமாக அபரிதமான லாபத்தைப் பெறத் தவறி, தொழிலாள வர்க்கத்தின் ஒரு பகுதியைக் கைலஞ்சம் கொடுத்துப் பெற முடியாமையுமே ஜெர்மன் முதலாளிகள் பாஸிஸத்தை நாட காரணமாகும்.



படிப்பகம்

padippakam

எனவே ஒரு ஹிட்லரை உருவாக்கி பண உதவி கொடுத்து ஆயுதங்கள் வழங்கி அடக்கு முறை ஒன்றின் மூலம் தமது தொழிலாள வர்க்கத்தை நசுக்க வேண்டிய அவசியம் ஜெர்மன் முதலாளித்துவத்திற்கு ஏற்பட்டது. அவர்கள் எதிர்பார்த்ததைப் போன்று இக்கைங்கரியத்தை ஹிட்லர் வெற்றிகரமாகச் செய்து முடித்தான்.

## இத்தாலியில் முசோலினி!

இத்தாலியிலேயே பாஸிஸம் முதலில் தோன்றிற்று. இதற்குத் தலைமை தாங்கிய பெனிட்டோ முஸோலினி ஆரம்பத்தில் சமதர்ம வாதியாயிருந்து ஏகாதிபத்தியத்தைக் கண்டித்தார். பின்னர் தமது சமதர்மச் சகாக்களோடு விரோதித்துக் கொண்டு 1919ல் சொந்தக் கட்சியொன்றை உருவாக்கினார். மிலான் நகரில் இவர் கூட்டிய மாநாட்டில் தீவிரமான பல திட்டங்கள் தீட்டப்பட்டன.

இத்தாலியில் அரசியல் குழப்பங்களும் பொருளாதாரக் கஷ்டங்களும் ஏற்பட்ட வேளையில் கட்டுப்பாட்டையும் ஒழுக்கத்தையும் நிலைநாட்டக் கூடிய ஒரு தலைவனை மக்கள் வேண்டி நின்ற வேளையில், நாட்டைக் காக்க வல்ல தலைவனாக தோன்றிய முஸோலினி ''நாடு என்பது அம்மக்களின் ஐக்கியத்தின் மூலமும் தலைவனின் மூலமுமே பிரதிபலிக்கின்றது'' எனக் கூறி தனது பாஸிஸ கொள்கையை வலியுறுத்தினான்.

## ஜப்பானிய பாஸிஸம்

ஜப்பானில் நிலவிய சம்பிரதாயங்கள், குடும்ப அமைப்புக்கள் போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டே அறிஞர்கள் ஜப்பானிய பாஸிஸத்தை ஆராய்ந்தனர். எனினும் இவற்றினால் மட்டும்தான் ஜப்பானில் பாஸிஸம் வளர்ந்து வந்தது என்று கூறி விடமுடியாது.

இங்கு நிலவிய பாஸிஸ கருத்துக்கள் இத்தாலி, ஜெர்மன் போன்ற நாடுகளின் பாஸிஸ தன்மைகள் சிலவற்றைக் கொண்டிருந்தன. உலக ரீதியான தனிநபர் தாராண்மை வாதம் - சுதந்திரத்தை வெளிப்படுத்தும் பாராளுமன்ற முறை - சமாதான சகவாழ்வு - வர்க்க ரீதியான போராட்டம் என்பவற்றை நிராகரிக்கும் தன்மை! அயல் நாடுகளை ஆக்கிர



படிப்பகம்

padippakam

மித்தல்! இராணுவத்தை அதிகரித்தல்! இன மேன்மையில் பற்று! தேச ஆதிக்க வெறி என்பவற்றை வலியுறுத்தியது. இத்தாலியில் முஸோலினியால் தள்ளுபடி செய்யப்பட்ட சமாதான வாதம் சோஷலிஸம், ஜன நாயகம், தனி மனிதத்துவம் என்பனவும் ஜப்பானிய பாஸிஸத்தினால் நிராகரிக்கப்பட்டன.

## பாஸிஸம் எப்போது அதிகாரத்திற்கு வருகிறது?

வர்க்க முரண்பாடுகள் உச்ச கட்டத்தை அடையும்போது அதாவது பாராளுமன்றம், தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை, வேலை நிறுத்த உரிமை போன்ற முதலாளித்துவ ஜனநாயக ஏமாற்றுக்கள் மூலம் தொழிலாளர்களையும் பொதுமக்களையும் ஆளும் முதலாளி வர்க்கம் தொடர்ந்தும் ஏமாற்றும் நிலை ஏற்படும் போது ஒரு நாட்டில் பாஸிஸம் அதிகாரத்திற்கு வருகிறது.

## பழிவாங்கப்படுபவர் யார்?

பாஸிஸம் தலைதூக்கி அதிகாரத்திற்கு வரும்போது அது முதலில் பழிவாங்குவது, ஸ்தாபன ரீதியில் திரண்டுள்ள தொழிலாளர்கள் - அதன் தொழிற்சங்கங்கள் - கட்சிகளையுமே ஆகும். ஏனெனில் பாஸிஸ எதிர்ப்பின் முன்னணி ஈட்டிகளாகத் திகழ்பவர்கள் தொழிலாள வர்க்கமும் அதனுடன் இணைந்துள்ள சிநேக சக்திகளும் ஆகும். தொழிலாள வர்க்கத்தின் தலைமையிலான பரந்த அளவிலான பாஸிஸ எதிர்ப்பு முன்னணி ஒன்று உருவாக்கப்படுவது சிறந்த உபாயமாகும்.

## தனிமனித சுதந்திரம் நிலவ முடியாது

இந்த ஆட்சியிலே தனிமனித சுதந்திரம் நிலவ முடியாது. எவரும் அரசினைக் குறை கூறவும் முடியாது. அரசியல் ரீதியாகப் பார்க்கும்போது ஆட்சியாளன் ஒருவன் பெரும் தலைவனாக இருக்கிறான். அவனே சட்டம் இயற்றுதல், நிர்வாகம் செய்தல், நீதி வழங்குதல் ஆகிய மூன்று பிரதான துறைகளுக்கும் பொறுப்பாக இருக்கிறான்.



படிப்பகம்

padippakam

பொருளாதார ரீதியாகப் பார்க்கும் போது இது தனியுடமையினை ஆதரிக்கிறது. இந்த அரசின் முக்கிய நோக்கம் இனப்பற்றும் இன ஆதிக்கத்தை நிலை நாட்டுவதும் ஆகும். இதற்காக ஆதிக்க வெறிபிடித்த பாஸிஸ அரசுகள் ஏனைய சிறிய பாதுகாப்பற்ற நாடுகளைக் கைப்பற்றுகின்றன.

## உணவுக்குப் பதில் துப்பாக்கி!

மேலே நாம் கண்ட நோக்கங்களின் அடிப்படையில் அமைந்த பாஸிஸ அரசுகள் உணவு உற்பத்தி செய்வதற்குப் பதிலாக துப்பாக்கிகளை உற்பத்தி செய்யும். பாஸிஸ அரசு ஒன்றின் முக்கிய கோஷமே,

'உணவுக்குப் பதில் துப்பாக்கி' என்பதுதான்.

எனவே பாஸிஸமானது இவற்றினூடாக,

ஜனநாயகம்,
தனிமனிதத்துவம்,
சமாதானவாதம்,
கம்யூனிசம்,
போன்றவற்றை நிராகரிக்கின்றது.

நாட்டின் பெருமைக்காக எந்த ஒழுக்கத்தையும் சிதறடிக்கலாம் என்பதும், இறைமையை மக்களிடம் ஒப்படைத்தால் ஆட்சிக்குக் கேடு விளையும் என்பதும் பாஸிஸவாதிகள் வாதங்களாக உள்ளன.

- மு. நேசமணி

---

## எரியும் பெண்கள்

**இந்தியாவில் வரதட்சிணைக் கொடுமை தாங்க முடியாமலும் வரதட்சிணை தராத காரணத்தாலும் தீய்க்கு இரையாகி எரிந்து போனோர் தொகை 1989ல் 922 என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இவ்வளவுதானா என்ற சந்தேகமும் எழவே செய்கிறது.**



படிப்பகம்

padippakam

# அணி திரண்டு வாரும்

- பீ. ஆர். அலெக்சாந்தர்

உள்ளத்தில் கள்ளமின்று
உண்மையான உழைப்பைத் தந்தும்
பள்ளத்தில் வீழ்த்தப்பட்டோம் பாரும் - எம்
பரிதாப நிலையை நீங்கள் கேளும்.

கள்ளமனம் சிறிதுமின்றி
கடுகளவு வஞ்சமின்றி
அள்ளித் தந்தோம் செலாவணியை நாமும் - ஆனால்
அடிமைதானாம் அதைநீரும் கேளும்.

எந்நாளும் மலைகளிலே
ஏறி இறங்கி வந்து
நொந்த நிலை ஒருநாளும் மாறாதோ? - மன
நோயொரு நாள் வழிவந்து தீராதோ?

பட்டகடன் அடைக்கவென
பத்துசதம் இல்லையென்று
எட்டடி காம்பராவில் முணுமுணுத்தோம் - எம்
ஏக்கத்தை அழுதுதானே தொணதொணத்தோம்.

சங்கங்கள் பலதோன்றி
சங்கடங்கள் தீர்க்குமென்று
எங்களுள்ளே நாங்கள் கொண்டோம் தெம்பு - அதை
எடுத்துச் சொன்னால் வீணான வம்பு.

கண்ணிருந்தும் குருடர்களாய்
காதிருந்தும் செவிடர்களாய்
இன்றுவரை தொடர்ந்த நிலை மாறும் - எம்
உரிமையை வென்றெடுக்க திரண்டிங்கு வாரும்.



படிப்பகம்

padippakam

# "குறும்பாக்கள்"

- குறிஞ்சி தென்னவன் -

வேலையொன்று நான் தேடிச் சென்றேன்;
மேலவரின் முன் ஒடுங்கி நின்றேன்;
ஓலை வரும் நாளை என்றார் -
ஓராண்டு போன தின்று
வேலை?... அது கானல், என கண்டேன்!

உணவில்லா வயிற்றில் பசி கிள்ளும்;
உணர்வுகளோ கவியெழுதச் சொல்லும்;
மனையாளின் வார்த்தைகளில் -
மலர்கின்ற தீச்சரங்கள்
எனையிங்கு எந்நாளும் கொல்லும்!

விழாக்களிலென் கவிக்குப்பா ராட்டு;
விருந்தினரின் புகழ்ச்சிநீ ராட்டு;
செலவுக்கு கைவிரிக்கும் -
செயலாளர் நிலைக்கிரங்கி
இலம்வந்தால் மனைவிசொல் வேட்டு!

மாவட்டச் செயலர்மதி வாணர்;
மதுக்கடைகள் பலவற்றின் ஓணர்;
கார்விட்டு இறங்கியதும்
காந்தியத் தத்துவங்கள்...
வாய் வட்டம் போட உயர் வானார்!

பாகான இனியமொழி பகர்வார்;
''பாரீரெம் நிலை'', என்றால் நகர்வார்;
வாகான மார்பில் மலர் -
மாலைகளின் நறுமணத்தை
ஆஹா! மிகமகிழ்ந்து முகர்வார்!



படிப்பகம்

padippakam

குப்பாயி செத்துவிட்டாள் இன்று;
கூடிவிட்டார் பெண்கள், இது நன்று;
எப்போதோ செத்துவிட்ட
எவரெவரோ பேர்சொல்லி
ஒப்பாரி வைப்பதென்ன? விந்தை!

புத்தன் வழி போகுமிந்த நாடு;
பொன்மொழிகள் வேதநிலைப் பாடு;
நித்தம் மதுப் பார்களிலே -
நிறைந்து வழி யும்மக்கள்
சித்தம் மதுப் போதைநிலைப் பாடு!

ஆட்டுக்கு கால்களிலே ஊனம்
அதற்கழுத மனம்பரந்த வானம்
ஈட்டிகளும் துப்பாக்கி
வேட்டுகளும் குண்டுகளும்
நாட்டின்செய லாகின் அவ மானம்!

# ஜோடி மாற்றம்

வானொலியில் ஜோடி மாற்றம் என்ற ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிட்ட ஒரு பாடலில் ஒரு பாடகருடனோ பாடகியுடனோ பாடும் ஒருவர் அடுத்த பாடலை வேறு ஒருவருடன் பாடுவார். ஆனால் பாரீசில் ஓர் குறிப்பிட்ட இடத்தில் வேறு விதமான ஜோடி மாற்றம் நடைபெறுகிறது.

பாரீஸ் நகரில் எக்சேஞ்ச் பொயின்ட் 'என்ற இடம் உண்டு. ஜோடிகளாக இங்கே ஒன்று கூடுபவர்கள் தங்கள் ஜோடிகளை (மாற்றிக் கொண்டு) எக்சேஞ்ச் பண்ணிக்கொண்டு உல்லாசமாக இருப்பார்கள். இடத்தை விட்டுப் போகும் போது மீண்டும் தங்கள் ஜோடிகளுடன் வீடு திரும்புவார்கள். ஒருவனுக்கு ஒருத்தி என்ற தமிழர் கலாச்சாரம் பற்றி அவர்களுக்கு அங்கே கூறினால் எடுபடுமா?



படிப்பகம்

padippakam

# "ஜாதிகள் இருக்குதடி பாப்பா"

(கண்ணம்மா)

புத்தன், ஏசு, காந்தி செய்த தவறுகளை பாரதியும் செய்து விட்டே சென்றான். தங்களைப் போலவே ஏனைய மனிதர்களும் இருப்பார்கள். மனிதப் பிறவிகளான தாங்கள் செய்வதை ஏனைய மனிதப் பிறவிகளும் பின்பற்றுவதில் எவ்வித சிரமமும் இல்லை என அவர்கள் எண்ணினர்.

காலொடிந்த ஆட்டுக்காக கண்ணீர் விட்டான் புத்தன். அவனைப் பின்பற்றுவதாகக் கூறுவோர் சொந்தச் சகோதரர்களையே கூறுபோட்டு கொன்று குவிக்கின்றனர்.

ஒரு கன்னத்திலறைந்தால் மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டச் சொன்னார் ஏசு. அவரது பக்தகோடிகள் சிலுவைகளைக் கழுத்தில் அணிந்து போர் என்று பெயர் பண்ணிக் கொண்டு பொதுமக்களைப் படுகொலை செய்கின்றனர்.

சாந்தி, சமாதானம், சத்தியம், அஹிம்சை என்ற தாரக மந்திரங்களால் அந்நியர்களை நாட்டைவிட்டு வெளியேற்றியவர் காந்தி. இன்று காந்தி குல்லா அணிந்தவர்கள் அவரது அத்தனை கொள்கைகளையும் குழி தோண்டி புதைத்து விட்டனர்.

பாரதியும் தன் பங்கிற்கு சொல்லிவிட்டுச் சென்றான்,

"ஜாதிகள் இல்லையடி
பாப்பா •
குலத் தாழ்ச்சி உயர்ச்சி
சொல்லல் பாவம்" என்று.

ஆனால் ஐம்பது வருடங்கள் கடந்த பின்பும் ஜாதிகள் இல்லாமல் போய் விட்டனவா? புதிய புதிய வடிவங்களை அவை எடுத்து வருகின்றன. நூற்றுக் கணக்கான ஜாதிச் சங்கங்கள் காளான்களென முளைவிட்டுக் கொண்டிருக்கின்றன. பாரதியும் தோற்று விட்டான். இன்று அவன் உயிரோடு இருந்தால்,

"ஜாதிகள் இருக்குதடி
பாப்பா —
குல உயர்வு சொல்லல்
பெருமை"

என பாட வேண்டிய காட்டாய நிலையில் இருந்திருப்பான்.

இந்தியாவில் ஜாதித் தலைவர்கள் புரியும் அட்டகாசங்களை எடுத்தியம்பும் அவசியம் எமக்கில்லை. அது ஊரறிந்த அவலங்கள்.

இலங்கையிலும் கூட வடக்கிலும் கிழக்கிலும் கடந்த காலங்களில் ஜாதிக் கொடுமைகள் கோரத் தாண்டவம் ஆடிய கதைகள் பல நிகழ்ந்துள்ளன.



படிப்பகம்

padippakam

யுத்தம், ஜாதி பாகுபாடின்றி எல்லோரையும் அகதிகளாக்கி விட்டது. ஒரே கூரையின் கீழ் ஒன்றாக உண்ண வேண்டிய கட்டாய நிலையிலும் கூட சிலரின் ஜாதித் திமிர் இன்னமும் அடங்கியபாடில்லை?

எமது இந்த கட்டுரையின் நோக்கம் மலையகத்தில் எந்த அளவு இந்த 'ஜாதிகள்' சாதித்துள்ளன என்பதைப் பார்ப்பதே யாகும்.

இது ஒரு 'அசிங்கமான' ஆராய்ச்சி தான். என்றாலும் 'ஜாதிச் சுரண்டல்கள்' எவ்வாறு பாமர மக்களிலிருந்து படித்தவர்- பணக்காரர் மத்தியிலும் பரந்துபட்ட ஆதிக்கத்தைச் செலுத்துகின்றன என்பதை அம்பலப்படுத்துவது சிலரது இரட்டை வேடங்களை உரித்துக் காட்ட உதவும்.

வெள்ளையர்களால் இங்கு இழுத்து வரப்பட்ட தொழிலாளர்களில் சுமார் 90 வீதத்தினர் உயர் சாதியினர் அல்லாதவர்கள் என்பதை புள்ளி விபரங்கள் காட்டுகின்றன. சந்தேகம் எவருக்கும் இருக்குமானால் பக்கத்தில் உள்ள இரண்டு மூன்று தோட்டங்களில் கணக்கெடுப்பு நடத்தினால் உண்மை புரியும். சிலவேளை இந்த விகிதாசாரம் 95% தாண்டி விடவும் கூடும்.

நிலைமை இப்படி இருந்தும் இந்த தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மிகப் பெரிய தொழிற்சங்கங்களின் உயர் பதவிகளில் ஆயுள்கால இடங்களைப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள் அனைவருமே உயர்சாதியினர் என தம்மை பறைசாற்றிக் கொள்பவர்களே!

கொழும்பிலும் கண்டி மற்றும் இடங்களில் நடைபெறும் ஜாதிச் சங்கக் கூட்டங்களுக்குத் தவறாமல் தலைமை தாங்கச் செல்வார்கள் இந்த தலைவர்கள்! அனைத்து மக்களுக்கும் தாங்கள் தலைமை தாங்குவதாகக் கூறும் இவர்கள் குறிப்பிட்ட ஜாதிச் சங்கங்களுக்கு தலைமை வகித்து ஜாதி வெறியைக் காட்டி நிற்கின்றனர்.

நிதி மற்றும் சங்கத் தலைமை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்யும் போது மிகவும் கவனமாக உயர் சாதி அல்லாதவர்கள் புறக் கணிப்புக்கு உள்ளாவார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓரிரு பதவிகளை தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கி ஏமாற்றுவது தலைவர்களுக்குக் கைவந்த கலை!

ஜாதிவெறி காரணமாக வெளியேற்றப்பட்டு வேறு சங்கங்களை அமைத்துக் கொண்டவர்களும் தங்களை இன்னார் என மக்களிடம் வெளிக்காட்டிக் கொள்வதில் வெட்கமடைகின்றனர்.

சங்கங்களும் கட்சிகளும் தான் உயர்சாதிக்காரர்களுக்கு உறைவிடமாக இருக்கின்றன வென்றால் கல்வித்துறையிலும் இதே நிலைதான்! அதிபர்கள், அதிகாரிகள் தெரிவின் போது இனங்கண்டு தாழ்த்தப்பட்டோர் புறக்கணிக்கப்படுகின்றனர்.



படிப்பகம்

padippakam

# தோட்டத் தொழிற் சங்கங்களின் முழக்கங்களும் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளும்

- மணியம்

மலையக தோட்டத் தொழிலாளர்கள், கடந்த கால நூற்றாண்டுகளுக்கும் மேலாக இந்த நாட்டின் தேசிய வருமானத்தைப் பெற்றுக் கொடுக்க தங்களை அழித்துக் கொண்டு - வாழ்வை அர்ப்பணித்து உழைத்து வருபவர்கள். இந்த இருபதாம் நூற்றாண்டிலும் அடிமைகளாக தொடர்ந்தும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

இன்று மலையக பிரதான நகரங்களெல்லாம் தொழிற்சங்க காரியாலயங்களால் நிரம்பி வழிகின்றன. புதிய புதிய தொழிற்சங்கங்கள் பிராந்திய ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் ஆங்காங்கே தோன்றுகின்றன.

## முழக்கங்கள்:

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம்!

அவர்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுப்போம்!!

என்ற முழக்கங்களுடனேயே தொழிற்சங்கங்கள் முளைக்கின்றன. எனினும் அவ்வடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்கான கூட்டுத் தலைமையில் அவை அணிதிரளுவதில்லை.

மலையகமெங்கும் தொழிலாளர்களை கூறு போட்டு ஆள்சேர்க்கும் பணிகளில் பல சிறிய பெரிய தொழிற்சங்கங்கள் போட்டி போட்டுக் கொண்டு செயல்படுகின்றன. தங்கள் மாதாந்த சந்தாவை எப்படி அதிகரிப்பது? மேலும் எத்தனை காரியாலயங்களை புதிதாகத் திறப்பது? போன்ற சிந்தனைகளிலேயே பெரும் பாலானவை தங்கள் நேரத்தைச் செலவிடுகின்றன.

## தொழிலாளர்களின் ஏமாற்றம்!

இவர்கள் செய்வார்கள், இல்லை அவர்கள் செய்வார்கள் என, தொழிலாளர்கள் ஆறு மாதத்திற்கு ஒரு தொழிற்சங்கம் என



படிப்பகம்

padippakam

அலைந்து திரிகிறார்கள். மேடைகளில் முழங்கும் முழக்கங்களை நம்பி இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதை உணராமல், இறுதியில் ஏமாந்து நிற்பதே தொழிலாளர்களின் தலைவிதியாயுள்ளது.

## முழக்கங்கள் என்னவாகின்றன?

காலத்துக்குக் காலம் சில தொழிற்சங்கங்கள் புதிய புதிய முழக்கங்களை தொழிலாளர் முன் வைக்கும். குறிப்பாக சந்தா பத்திரங்களை தோட்ட நிர்வாகங்கள் ஏற்கும் காலங்களில் இவை மும்முரமாக ஒலிக்கும். சங்கத்திற்கு ஆள் சேர்ந்ததும் இவை காற்றில் பறந்துவிடும்.

- நாடற்றவர்களுக்கும் சம உரிமை!
- வீடும் சுற்றியுள்ள காணியும் சொந்தம்!
- தோட்டத் தொழிலாளர்க்கு மாத சம்பளம்!
- தோட்டத் தொழிலாளிக்கும் சம்பள அதிகரிப்பு!
- தோட்டங்களில் தொழிலாளர்க்கும் பங்குகள்!

இவைகள் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பெற்றுத் தருவோம் என்ற சங்கங்களின் சங்க நாதங்கள்!

## அடிப்படைத் தேவைகள்

- உணவு
- உடை
- உறையுள்
- சுகாதாரம்
- கல்வி
- சுதந்திரம்
- ஜனநாயகம்

போன்றவை மனிதனின் அடிப்படைத் தேவைகள் எனலாம். எம் மக்கள் இவைகளில் தன்னிறைவு காண்கிறார்களா? என சிந்தித்தால் கிடைக்கும் விடை திருப்தி தரப்போவதில்லை.

முழக்கங்களை விடுக்கும் தலைவர்கள் தங்கள் தேவைகள் பூர்த்தியானவுடன் மக்கள் சேவைகளை மறந்து விடுகின்றனர்.

இன்று எம் மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் அநேகமுண்டு. இவைகளைத் தீர்க்க ஐக்கியப்பட்டுப் போராட முன்வராத தொழிற்சங்கங்களின் போக்கு வேதனைக்குரியதாகும்.



படிப்பகம்

padippakam

## தோட்டங்கள் தேசியமயம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும் இணைந்து கூட்டரசாங்கம் அமைத்த 1970ஆம் ஆண்டு இந்நாட்டு அரசியலில் ஒரு திருப்பு முனை ஏற்படுத்திய நிகழ்ச்சியாகும். பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் பிடியிலிருந்து பெருந்தோட்டத்துறை தேசியமயமாக்கப்பட்டது இவ்வாட்சியில்தான் நடந்தது. இதனால் தோட்டத் தொழிலாளர்கள் ஓரளவு சுதந்திரம் பெற்றவர்களாக விளங்கினர்.

## தனியார் மயம்

இந்த அரசு அரசுடைமையாக்கிய தோட்டங்களை மீண்டும் தனியார் மயப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அது மட்டுமல்லாமல் காலங்காலமாகத் தொழிலாளர்கள் அனுபவித்த பல சலுகைகளும் உரிமைகளும் நாம் பார்த்துக் கொண்டிருக்கும் போதே பறி போகின்றன.

## உரிமைகளும் சலுகைகளும் பறிபோகின்றன

குறிப்பாக பண்டிகைக் கால முற்பணத்தை முன்கூட்டியே சம்பளத்தில் கழிக்க எடுத்த நடவடிக்கையைக் குறிப்பிடலாம். பல தொழிற்சங்கங்கள் இந் நடவடிக்கையை எதிர்த்த போது சில தொழிற்சங்கங்கள் ஆதரவாகக் குரல் எழுப்பின. இந்த விடயத்திலாவது ஐக்கியப்படாத சங்கங்களின் போக்கு ஒரு சமூகத் துரோகச் செயலாகும்.

## அணிதிரள்வோம்

தோட்டத் தொழிலாளர்களும் இந்நாட்டுப் பிரஜைகள் என்பதை நாட்டின் ஏனைய பிரிவினருக்கு எடுத்துக்காட்ட வேண்டும். எத்தனையோ அமைச்சர்கள் எம்மிடையே இருந்தபோதும் எவ்வளவோ பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை என்பதை உணர்த்திட வேண்டும்.

பொதுக் கோரிக்கைகளை வென்றெடுக்க மக்களின் அடிப்படை உரிமைகளை பேணிக் காத்திட அனைவரும் தொழிற்சங்க பேதங்களை மறந்து அணிதிரண்டு போராடவேண்டும்.



படிப்பகம்

# கேள்வி பெட்டி

## இருசீணன்

**எஸ். சிவராமன், இறம்பொடை.**

கே: உள்ளூராட்சித் தேர்தலில் நம்மவர்கள் பலர் பதவிகளில் அமர்ந்துள்ளதனால் எமது பிரச்சினைகள் பெருமளவு தீர்க்கப்பட்டுவிடுமா?

ப: சமூகத்தில் தலைமைத்துவம் பெற்ற சிலரை குரல் எழுப்பச் செய்யாமல் தடுக்க ஆளுவோரால் அளிக்கப்படும் லஞ்சமே இத்தகைய பதவிகள்! மாகாணசபைக்காரர்கள் பஜேராக்களுடன் திருப்தியடைந்து விட்டனர் இனி பிரதேச, நகர சபைக்காரர்களுக்கு பைசிக்கள் கொடுத்து ஓரங்கட்ட வேண்டியதுதான் பாக்கி!

**கே. தமிழ்வாணன் கந்தபளை.**

கே: கொக்கட்டிச் சோலை சம்பவங்களுக்காகக் கவலை தெரிவிக்காத நம்மூர்த் தலைவர்கள் ஜெயலலிதாவின் வெற்றிக்கு வலிந்து சென்று பாராட்டு தெரிவிப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: கும்பகோணத்தில் மழை பெய்தால் கொழும்பில் குடை பிடிக்கும் இவர்களை எல்லாம் தலைவர்களாக ஏற்றுக் கொண்டுள்ளவர்களின் தலைவிதி என்றுதான் மாறுமோ என்ற விரக்தி தான் மேலோங்குகிறது.

**என். சுகந்தினி ஆலி- எல**

கே; இந்தியாவில் இளமையான தலைவர்களுக்கு இனி எதிர்காலமே இல்லையா?

ப: தேசத்திற்காக உண்மையாகத். தியாகம் செய்த, அடிமட்டத்திலிருந்து . கட்சிக்காக உழைத்து மேலே வந்தவிசுவாசமானஅரசியல் வாதிகளுக்கு இப்போதுதான் இந்திய அரசியலில் உரிய இடம் கிடைத்துள்ளது. திடீர்த் தலைவர்களுக்கு இனி அங்கே இடமில்லை.

**பி. சுந்தர் அக்கரபத்தனை.**

கே; தேர்தலின் பின் மாற்றுக் கட்சியினர் பழிவாங்கப்படுவதும் இடமாற்றப்படுவதும் இந்தப் பகுதியில் அதிகமாவதை அறிவீர்களா?

ப: ஜனநாயகம் என முழங்கு

padippakam

வோரே அதனை குழி தோண்டிப் புதைக்கின்றனர். சரித்திரம் மாறிக் கொண்டிருப்பதை உணராதவர்கள் என்றைக்கும் மார்க்கண்டேயர்களாக தாங்கள் வலம் வருவோம் என்ற கனவில் மிதப்பவர்கள் செய்யும் வேலைகள் இவை. காலம் தான் இவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டும்.

சி. ராஜகுமாரி, நாவலப்பிட்டி.

கே: அதிகாரிகளை அவமதிக்கும் அரசியல்வாதிகளின் கொட்டம் எப்போது அடங்கும்?

ப; அதிகாரிகளை நியமிப்பது அரசியல்வாதிகளின் கையில் என்ற நிலை நீடிக்கும் வரை இவர்களின் கொட்டம் அடங்கப் போவதில்லை.

எஸ். கனகராஜ், மஸ்கெலியா.

கே: புதிய புதிய கட்டிடங்களும் தளபாடங்களும் எமது பாடசாலைகளுக்குக் கிடைத்திருப்பது மலையகக் கல்வியில் புரட்சிகரமானமாறுதலை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஏற்றுக் கொள்வீர்களா?

ப: மஸ்கெலியாவும் நோர்வூட்டும் மட்டும் தான் மலையகம் என்று நீங்கள் நினைத்துக் கொண்டால் அதனை நான் எப்படி ஏற்றுக் கொள்வது?

மு. மயில்வாகனம், புரட்டாசி.

கே: தோட்டங்கள் மீண்டும் தனியார் மயப்படுத்தப்பட நடக்கும் ஏற்பாடுகளை சில தொழிற்சங்கத் தலைமைகள் கண்டும் காணாமல் இருப்பதேன்?

ப: தோட்டங்களை மீண்டும் கையேற்கும் தனியார் கம்பெனிகளின் முதலாளிகளாக அவர்கள் மாறப் போகிறார்கள் என்பது தான் காரணமாக இருக்க முடியும்.

எல். கிருஷ்ணகுமார், லிந்துல.

கே: தோட்டங்கள் கிராமமாக்கப் படும் என்று ஒவ்வொரு மேதினமன்றும் கூறப்படும் தலைவர்களின் கூற்று எப்போதுதான் செயலுருபெறும்?

ப: ஏற்கெனவே நுவரெலியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இவ்வாறு தோட்டங்கள் கிராமங்களாக மாற்றம் பெற்று விட்டனவே! உங்களுக்குத் தெரியாதா? ஆனால் அவற்றில் நூற்றாண்டுகளாக உழைத்து ஓய்ந்த தோட்டத் தொழிலாளர்கள் மட்டும்தான் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

கே. கணபதி, மன்றாசி.

கே: ஜெயலலிதா உடனடியாக என்ன செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்?

ப: நாட்டுக்கு அவர் எதையும் செய்வதற்கு முன் சந்தர்ப்



படிப்பகம்

padippakam

பத்தைப் பயன்படுத்தி தனக்கு ஏற்ற துணை ஒன்றை அவர் தேடிக்கொள்வது நல்லது. அப்போது தான் அவரது திமிர்த்தனம் அடங்கி நிதானம் பிறக்கும்.

எஸ். செந்தமிழரசி,
பொகவந்தலாவ

கே; மலையகத்தில் பேரவைக் காரர்கள் அரசியல்வாதிகளின் பின்னால் அலைவதன் மர்மம் என்ன?

ப: தனியார் மயப்படுத்தப் படப்போகும் தோட்டங்களை 'முதல் இல்லாமல்' வாங்கிக் கொழுக்க அந்த அவை உறுப்பினர்கள் கியூவில் முண்டியடித்துக் கொண்டு சிபாரிசுக்காக அலைகிறார்கள் என்று கேள்வி.

சி. புஷ்பநாதன்
கட்டுகஸ்தோட்டை.

கே; எனக்கு ஒரு அதிபர் பதவி வேண்டுமே! யாரைப் பிடித்தால் சரி வரும்?

ப; ஆள் உயர மாலையொன்றை அணிவித்து நெடுஞ்சான் கிடையாக தரையில் வீழ்ந்து மண்டியிட சம்மதமானால் வழிகாட்ட முடியும்.

எம். சிவசங்கர், சாமிமலை.

கே: தமிழக முதல்வர், இந்தியப் பிரதமர் இவர்களில் காணும் ஒற்றுமை வேற்றுமை என்ன?

ப: இருவருமே அடிக்கடி ஆஸ்பத்திரி போக வேண்டிய நிலையிலுள்ளது ஒற்றுமை! பிரதமர் அடித்தளத்திலிருந்து அரசியலில் படிப்படியாக மேலேறியவர்! இன்றைய முதலமைச்சர் முன்னாள் முதலமைச்சர் ஒருவரின் 'கதாநாயகி' களுள் ஒருவர் என்ற ஒரே காரணத்தால் உச்சாணிக் கொம்பில் ஏறிவிட்டவர்.

கே. கல்யாணி, டிக்கோயா.

கே: மலையகப் பாடசாலைகளில் அதிபர் பதவிகளில் மீண்டும் குளறுபடியா?

ப: அரசியல் குழப்பக்காரர்கள் இருக்கும்வரை அதிபர்களும் குழப்பத்திலும் குளறுபடிகளிலும வாழப்பழகிக் கொள்வதே புத்திசாலித் தனம் போல் இருக்கிறது.

எல். சுந்தரேசன், வட்டவளை.

கே: ராஜீவ் பிறந்த மண்ணில் வேற்றாட்சி! தமிழகத்தில் மட்டும் மக்கள் அவர் மீது கொண்ட பக்தியால் துள்ளித் துடித்துப் போனது ஏன்?

ப: வந்தாரை வாழ வைப்பதும் சொந்தக்காரர்களை துரத்தியடிப்பதும் பர்மாவிலிருந்து அகதிகள் வரத் தொடங்கிய அந்தக் காலம் முதலே நடந்து வருவது தான்! அதிலும் வெள்ளைத் தோலில் வெறிமிக்க பக்தி கொண்டவர்கள் தமிழக மக்கள்!



படிப்பகம்

padippakam

சிறுகதை

# எனது சோகமான முகம்

-சு. தீபன் -

**நான்** துறைமுகத்தருகே நின்று கடல்புறாவைப் பார்த்துக்கொண்டிருந்த போது, அப்பகுதியில் கடமையிலீடுபட்டிருந்த பொலிஸ்காரனை எனது சோகமான முகம் ஈர்த்திருந்தது. மேலே பறந்தும், கீழே இறங்கியும் இரை தேடிக்கொண்டிருந்த பறவையை அவதானிப்பதில் நான் முற்றாக மூழ்கியிருந்தேன்.

துறைமுகம் எண்ணெய் ஊத்தையில் மங்கியும், கடல்நீர் எண்ணெய் மேலாடை போர்த்தியும் காட்சியளிக்க, கடல்நீர் பரப்பின் மீது அழுக்குகள் மிதந்துகொண்டிருந்தது. கப்பல் ஒன்றுமே பார்வைக்குத் தென்படவில்லை. பாரந்தூக்கி துருப்பிடித்திருந்தது; கிட்டங்கியில் மௌனம் படிந்திருந்தது. எலிகள் கூட துறைமுகத்தின் அழுக்குத் தாங்க முடியாமல் அங்கிருந்து அகன்றிருந்தன. பல வருடங்களாக புறஉலகின் தொடர்புகளெதுவுமின்றி அழகிழந்து காணப்பட்டது அத்துறைமுகம்.

நான் ஒரு கடல்புறாவின் சிறகுகளை அவதானித்துக் கொண்டிருந்தேன். மோசமான காலநிலையை முன்கூட்டியே அனுமானித்து, பயத்துடன், நீர் மட்டத்துடனேயே பறந்து கொண்டிருந்தது. சிலவேளைகளில் மட்டும் சில அடிகள் மேலெழுந்து தனது கூட்டாளிகளுடன் இணைந்து சிறிது தூரம் பறந்து மீண்டும் கீழ் மட்டத்துக்கே வந்திருந்தது. எனக்கு விருப்பம் என்று ஒன்று இருந்திருக்குமாயின் ஒரு பாண்துண்டு வேண்டுமென விரும்பியிருப்பேன். கடல்புறாவிற்குக் கொடுப்பதற்காகவும், திசை தெரியாமல் பறந்து கொண்டிருக்கும் அந்தச் சிறகுகளுக்கு ஒரு இலக்கை உண்டாக்க எனக்கு பாண்துண்டு ஒன்று தேவைப்பட்டது. ஆனால் எனக்கும் அந்தப் பறவைகளைப் போலவே பசியாக இருந்தது. களைப்பு; ஆனாலும் எனது சோகத்தின் மத்தியிலும் அங்கு நின்று, காற்சட்டைப்பைக்குள் கைகளை ஒழித்துக் கொண்டு அந்தப் பறவைகளைப் பார்த்துக்கொண்டிருப்பதில் எனக்குள் ஒரு சந்தோஷமிருந்தது.

திடீரென அதிகாரபூர்வமான கையொன்று எனது



படிப்பகம்

padippakam

தோள் மீது விழ குரலொன்று ''என்னுடன் வாரும்!'' என்றது. அதே நேரம் எனது தோளில் விழுந்த கை என்னை முன்னும் பின்னும் உலுப்பிக் கொண்டிருந்தது. நான் அசையாமல் நின்று கொண்டு, கையை அப்புறப் படுத்தி அமைதியான குரலில் ''உமக்கு விசர்'' என்றேன்.

''தோழரே'', இன்னமும் எனது பார்வையில் படாத உருவம் ''நான் உம்மை எச்சரிக்கிறேன்'' என்றது.

''எனது ஐயா'' நான் மீண்டும்...

''இங்கு ஐயா ஒருவரும் இல்லை'' கோபத்துடன் கத்திய பொலிஸ் ''நாங்கள் அனைவரும் தோழர்கள்'' என்றான்.

இப்போது பொலிஸ் என்னை நெருங்கியிருந்தான். நான் எனது சந்தோஷ பார்வையை கழற்றி அவனது விழிகளுள் மாண்டிருந்தேன். அந்த பொலிஸ் வருடக்கணக்கில் கடமையைத் தவிர வேறெதுவும் விளங்கியிராத காட்டெருமை போல காட்சியளித்தான்.

''என்ன காரணத்தால்...'' நான் ஆரம்பித்தேன்.

''போதியளவு காரணம்'', உடனடி பதில் ''உமது சோகமான முகம்''.

நான் சிரித்தேன்.

''சிரிக்காதேயும்!'' அவனது கோபம் அப்பட்டமானது. நான் முதலில் அவனுக்கு போராக இருந்திருக்க வேண்டும் என நினைத்தேன். பதிவு செய்யப்படாத வேசியோ, குடிகார மாலுமியோ அன்றி கள்ளனோ, கொள்ளைக்காரனோ அகப்படாததால் என்னைக் கைது செய்கிறான் என நினைத்தேன். ஆனால் இப்போது உண்மையிலேயே விடயம் சீரியஸானது என உணர்ந்தேன். அவன் என்னைக் கைது செய்யப் போகிறான்.

''என்னுடன் வாரும்...!''

''எதற்காக'' நான் அமைதியாகக் கேட்டேன்.

நான் உணருமுன்னரே எனது இடது கை ஒரு கைச்சங்கிலியுடன் இணைக்கப்பட்டு விட்டது. இந்தக் கணத்தில் நான் மீண்டும் தொலைந்து விட்டேன் என்பதை உணர்ந்து கொண்டேன்.

இறுதித் தடவையாக திசையின்றி வட்டமிட்டுக் கொண்டிருந்த கடல்புறாவின் மீதும், சாம்பல் நிற வானத்தின் மீதும் எனது பார்வையை எறிந்து, திடீரென கடல்நீரின் மீது பாய நினைத்தேன். எங்கேயோ ஒரு ஜெனரலின் பின்வீட்டிலோ அல்லது சிறைச்சாலையிலோ மிகு



படிப்பகம்

padippakam

திக் காலத்தைக் கழிப்பதை விட நீரில் மூழ்கிச் சாவது பரவா யில்லை என எனக்குப் பட்டது. ஆனால் பொலிஸ் என்னை இறுக்கிப் பிடித்திருந்ததால் என் னால் சற்றேனும் நகரமுடிய வில்லை.

"எதற்காக?" நான் மீண் டும் வினவினேன்.

"நீர் சந்தோஷமாக இருக்க வேண்டும் என ஒரு சட்டம் உள்ளது."

"நான் சந்தோஷமாக உள் ளேன்!" நான் கத்தினேன்.

உமது சோகமான முகம்..." அவன் தலையை மறுக்கும் பாவ னையில் ஆட்டினான்.

"ஆனால் இந்தச் சட்டம் புதியது" நான்.

"இந்தச் சட்டம் 36 மணித் தியாலம் பழையது. ஒவ்வொரு சட்டமும் அறிவிக்கப்பட்டு 24 மணி நேரத்தில் நடைமுறைப் படுத்தப் படும் என்பதை நீர் அறிவீர்"

"ஆனால் எனக்கு இந்தச் சட்டம் தெரியாது."

"அதன் மூலம் நீர் தண் டனையிலிருந்து தப்பமுடியாது. இந்தச் சட்டம் நேற்றுமுன் தினம், வானொலிமூலம், அனைத் துப் பத்திரிகைகளின் மூலம் அறி விக்கப்பட்டிருந்தது இவற்றை" இவ்வேளை அவன் என்மீது உதாசீனமாக ஒரு பார்வையை வீசி "வாசிக்கவோ, கேட்கவோ முடியாதவர்களுக்கு துண்டுப் பிரசுரம் மூலம் அனைத்து வீதி களிலும் மூலை முடுக்குகளிலும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. தோழரே நீர் இறுதி 36 மணித் தியாலங்களும் எங்கிருந்தீர் என் பதை கண்டுபிடிக்க வேண்டும்."

அவன் என்னை கூட்டிக் கொண்டு புறப்பட்டான்.

இப்போது என்னிடம் ஓவர் கோட் இல்லாததால் குளிர் உறைக்கத் தொடங்கியது. பசி எனது வயிற்றின் அடிப்பாகத்தி லிருந்து மேலெழுந்து பிறாண் டத் தொடங்கியது. இப்போது நான் அழுக்காகவும், சவரம் செய்யாமல் இருப்பதும், சட்டத் தின் பிரகாரம் ஒவ்வொரு தோழர்களும் துப்பரவுடனும், சவரம் செய்யப்பட்ட முகத்தில மகிழ்ச்சியுடனும் இருக்கவேண் டும் என்பதை உணர்ந்துகொண் டேன்.

வீதி வெறுமையாக இருந் தது. பொலிஸ் நிலையம் மிகத் தொலைவில் இல்லை. என்னைக் கைது செய்வதற்கு அவர்கள் எப்போதும் காரணம் கண்டு பிடிக்க முடியும் என்பதை நான் அறிந்திருந்தாலும் எனது இத யம் கனக்கத் தொடங்கியது.

நான் இளமையில் உலவித் திரிந்த வீதி வழியே என்னைக் கூட்டிச் செல்லும் போது துறை முகத்திலிருந்து திருப்பியதும நான் இங்கு வரவேண்டும் என விரும்பியிருந்தது ஞாபகம் வந்



படிப்பகம்

padippakam

தது. குப்பையாக வளர்ந்திருந்த பூக்களெல்லாம் மறைந்து துப்பரவாக, சதுரவடிவத்தில் தாய் நாட்டை ஞாபகப்படுத்தும் வகையில் நேர்த்தியாக வளர்க்கப்பட்டிருந்தது. காற்றும், வானமும் மட்டும் முன்னர் போல் எனது கனவில் தோன்றுவது போல் மாற்றமின்றி அப்படியே இருந்தது.

நாங்கள் வீதியால் சென்று கொண்டிருந்தபோது எங்களை எதிர்கொள்ள வேண்டிய பாதசாரிகள் மிக மகிழ்ச்சியான முகங்களைக் காட்டி எமக்கெதிரே வருவதைத் தவிர்த்து அவசரமாக எதிரில் இருந்தோ கடைக்கோ அன்றி குறுக்குத் தெருவினிலோ, அல்லது எதிர்த்த வீடுகளிலோ சென்று மறைந்தனர்.

ஒருமுறை மட்டும் தெரு முடக்கொன்றில் பார்வைக்கு பாடசாலை ஆசிரியர் போல் தோன்றிய வயதுபோன மனிதன் ஒருவர் வேறெங்கும் ஒழிக்க முடியாமல், சட்டத்தின் பிரகாரம் பொலிசுக்கு வணக்கம் தெரிவித்தபின்னர், தனது கடமையை நிறைவேற்ற முழுமுயற்சியும் எடுத்தார். சட்டத்தின் பேரில் அவர் எனது முகத்தில் மூன்று தடவைகள் துப்பி, ''நாட்டுத்துரோகி'' என என்னை பறைசாற்ற வேண்டும். வ ,தானவர் தனது கடமையை சரியாகத்தான் செய்திருந்தார். ஆனாலும் அவரது தொண்டை காய்ந்திருந்ததால் சில எச்சில் துளிகள் மட்டுமே எனது முகத்தில் பட்டது. நான் சட்டத்துக்கு எதிராக மனம் போன போக்கில் எனது புறக்கையினால் அவ் எச்சிலை துடைக்க முயன்றபோது, பொலிஸ் எனது பின்புறத்தில் உதைத்து தனது மூடிய கைகளினால் எனது முதுகெலும்பின் மத்தியில் தாக்கி, அமைதியான குரலில் ''முதலாவது படி'' என்றான். அதன் கருத்து- இதுதான் பொலிஸ்காரனினால் கொடுக்கப்படும் அதிகுறைந்த தண்டனை.

.....................

நாம் சாதாரண கொங்க்ரீட்டினால் அமைக்கப்பட்டிருந்த பொலிஸ் நிலையத்திற்கு வந்தபோது அதன் வாசலில் காவலுக்கு அமர்த்தப்பட்டிருந்த இரு பொலிஸ்காரர்களும் அவர்களைக் கடக்கும் போது என்மீது வ்ழக்கமான ''பௌதீக நடவடிக்கைகளை'' மேற்கொண்டார்கள். துப்பாக்கி முனையினால் நெற்றியில் ஒருவனும், கைத் துப்பாக்கியினால் தோள்ப்பட்டையில் மற்றவனுமாக தாக்கினார்கள்.

அதன்பின்னர் நாங்கள் வெறுமையான ஒரு அறையில் நுழைந்தோம். அறையினுள் மேசையொன்றின் மேல் தொலைபேசியும், இரு கதிரைகளும் போ டப்பட்டிருந்தன. நான் அறையின் மத்தியில் நிறுத்தி வைக்கப்பட என்னை



படிப்பகம்

padippakam

அழைத்துவந்த பொலிஸ் ஹெல் மட்டைக் கழட்டி கதிரையில் அமர்ந்தான்.

முதலில் அனைத்தும் நிசப்த மாக இருந்தது. எதுவுமே நடை பெறவில்லை. எப்போதும் அவர் கள் இப்படித்தான் செய்வார் கள். இதுதான் மோசமான விட யம். எனது முகம் களையிழந்து கொண்டு போவதை உணர்ந் தேன். எனக்குக் களைப்பாக வும், பசியாகவும் இருந்தது. எனது சோகத்தால் உண்டான சந்தோஷத்தின் இறுதி தடயங் களும் அகன்றுபோனது. நான் தொலைந்து போனேன் என எனக்குத் தெரிந்தது.

சில கணங்களின் பின் மௌனமாக நெடிய, வெளிறிய மனிதன் ஒருவன் நுழைந்தான். அணிந்திருந்த மண்ணிற சீருடை யிலிருந்து அவன் தான் முன் விசாரணையாளன் எனத் தெரிந் தது. பேச்சேதுமின்றி கதிரை யில் அமர்ந்து என்னை நேரடியா கப் பார்த்து,

''தொழில்?''

''சாதாரண தோழன்''

''பிறந்தது?''

''1.1. ஒன்று'', கூறினேன்.

''இறுதியாகச் செய்த தொழில்?''

''குற்றவாளி''

இருவரும் தம்முள் பார்வை யைப் பரிமாறிக்கொண்டனர்.

''எப்போது, எங்கு விடு தலை செய்யப்பட்டது?''

''நேற்று, 12 வீடு, 13ம் அறை.''

''எவ்விடத்தில் விடுதலை செய்யப்பட்டது?''

''தலைநகரில்''

''பத்திரம்''

நான் எனது காற்சட்டைப் பையிலிருந்து விடுதலைப் பத்தி ரத்தை எடுத்து அவர்களிடம் நீட்டினேன். அவன் எனது தரவு களை எழுதத் தொடங்கிய பச்சைப் பத்திரத்தில் அதை கிளிப் பண்ணி,

''முன்னைய குற்றம்?''

''சந்தோஷமான முகம்.''

இருவரும் தம்முள் பார்வை யைப் பரிமாறிக் கொண்டனர்.

''விளக்கம்''

''அந்நாளில்'', நான் கூறி னேன். ''துக்கம் பிரகடனப் படுத்தப் பட்ட ஒரு தினத்தில் எனது சந்தோஷமான முகம் ஒரு பொலிஸின் பார்வையில் பட்டது. அன்று தலைவர் மறைந்த தினம்.''

''எவ்வளவு காலத் தண் டனை.''

''ஐந்து.''

''மதிப்பு''

''நல்லதில்லை.''

''காரணம்''

''வேலையில் திறமை யின்மை.''

''முடிந்தது.''

இதன்பின் முன்விசாரணை யாளர் எழுந்து என்னருகேவந்து எனது முன்வாயின் மத்தியில்



படிப்பகம்

padippakam

உள்ள சரியாக மூன்று பற்க ளைப் பிடுங்கினான். நான் ஏற் கனவே தண்டனைக்குள்ளாக் கப் பட்டவன் என்பதைத் தெரி விக்கும் ஒரு கடுமையான நட வடிக்கை; நான் முற்றுமுழுதாக எதிர்பார்க்காத ஒரு விடயம்.

முன் விசாரணையாளர் அறையை விட்டு வெளியேற கடும்மண்ணிற சீருடையுடன் விசாரணையாளர் நுழைந்தார்.

அவர்கள் அனைவருமே என் னைத் தாக்கினர். விசாரணை யாளர், மேல்விசாரணையாளர், உயர்விசாரணையாளர், அதி காரி, மேலதிகாரி என அனைவ ரும் என்னை தாக்கினர். இடை யிடையே சில பொலிஸ்காரர் கள் சட்டத்தின் பேரில் பௌதீக நடவடிக்கைகளை மேற்கொண் டார்கள். அத்துடன் முன்னர் எனது சந்தோஷ முகத்திற்கு ஐந்து வருட தண்டனை தந்தது போல், இம்முறை சோக முகத் திற்கு பத்து வருடம் தந்தார் கள்.

இந்த பத்து வருடகாலத்தி லும் முடிந்தால் ஒரு முகமும் இல்லாமல் இருப்பதற்கு நான் முயற்சி செய்யவேண்டும்... ★

நன்றி: கதிர்.

# புகைப்பார்

புகையைப் பார்
புகைப்பார்
புகைக்கும் இவரைப்பார்

கண்ணைப்பார்
புகையினால் மங்கிய கண்
ணைப்பார்
உதட்டைப்பார்
புகையினால் கறுத்த
உதட்டைப்பார்

துடிப்பார்
நெஞ்சுவலியால் துடிப்பார்
படுப்பார்
ஆஸ்பத்திரி கட்டிலில் படுப்பார்
டாக்டரைப்பார்
எக்ஸ்றே எடுப்பார்
ஏளனமாக பார்ப்பார்

ஈரலைப்பார்
கல்லீரலைப்பார்
அதில் பிடித்திருக்கும் புகையைப்
பார்
ஏசியும் பார்ப்பார்
ஏதோ மருந்துகளை கொடுப்
பார் - இவர்
திருந்தியவர் போல் நடிப்
பார்
மீண்டும் பார் புகைப்பார்!

கே. எஸ். சந்திரசேகர்,
கொண்டக்கெலை,
லபுக்கெலை.



படிப்பகம்

padippakam

# தமிழக சட்டமன்றத் தேர்தல் முடிவுகள்

| கட்சி | 1989 வாக்குகள் | 1989 ஆசனங்கள் | 1991 வாக்குகள் | 1991 ஆசனங்கள் |
|---|---|---|---|---|
| தி. மு. க. | 79,94,276 | 151 | 54,65,000 | 1 |
| அ. தி. மு. க. | 51,77,716 | 27 | 108,00,000 | 163 |
| இந். காங்கிரஸ் | 48,45,841 | 26 | 37,75,000 | 61 |
| கம்யூ. இடது | 8,24,155 | 15 | 7,77,000 | 1 |
| கம்யூ. வலது | 2,94,952 | 3 | 3,05,000 | 1 |
| ஏனையவை | 52,05,310 | 10 | – | 5 |

*தி. மு. க. வில் வென்ற கலைஞர் பதவியைத் துறந்து விட்டதால் தற்போது தி. மு. க.விற்கு ஒரு இடமும் இல்லை. அ. தி. மு. க.வில் பிரிந்து நின்று வெற்றி பெற்ற சாத்தூர் இராமச் சந்திரன் மீண்டும் அ. தி. மு. க. வில் இணைந்ததாலும், சுயேட்சை யாக வென்ற தாமரைக் கணியும் அ. தி. மு. க.வில் சேர்ந்துவிட்ட தாலும், அ. தி. மு. க. 165 ஆகவும், எதிரணியில் ஐவருமாகவும் எண்ணிக்கை மாறியுள்ளது.*

**"வெறும் கையில் விபூதியை வரவழைப்பவன் ஞானியல்ல; வெறும் உள்ளத்தில் விவேகத்தை வளர்த்துக் கொள்பவனே ஞானி!"**

- கண்ணதாசன்

*(அர்த்தமுள்ள இந்துமதம்–1)*



படிப்பகம்

padippakam




**(பேனா நண்பர் தொடர்பு - விரும்புவோரின் பகுதி)**

- ராணி பாண்டியன், 30, தெற்கு மாசி வீதி,
  வக்கீல் சங்கரலிங்கம் பிள்ளை காம்பவுண்டு, ஸ்ரீ வைகுண்டம்.

- வரலட்சுமி குமார், மே/பா போஸ், 29, ராஜகோபாலன் தெரு,
  சிந்தாரிப்பேட்டை, சென்னை – 600002.

- டி. உஸ்மான் ஷெரீப், 5/42, அம்பேத்கார் காலனி,
  ஜாகிர் ரெட்டிப்பட்டி, சேலம் – 636005.

- ஜான்ஸி ஜயராம், ஈஸ்வரி இல்லம், காலினா, பம்பாய் – 400098.

- எம். நமசிவாயம், சோமநாதன் கோவில் (வடக்கு), வடகட்டளை,
  வேதாரண்யம் போஸ்ட், தஞ்சை - 614810.

- எஸ். பத்மாவதி, 3வது குறுக்குத் தெரு, சக்தி நகர்,
  பாண்டிச்சேரி - 13.

- சு. செல்லப்பாண்டியன், மே/பா. ச. பெ. பரமசிவம்,
  உலகநாதன் முறுக்குக் கடை, மேட்டுத் தெரு, சம்மட்டிபுரம்,
  அரசரடி போஸ்ட், மதுரை – 16.

- வை. எம். ரேவதி பிரேம்ராஜ், 9, ஸ்டேசன் ரோடு,
  தாம்பரம் சானடோரியம், சென்னை – 600047.

- ஏ. நசீர் அகமது, 83 III, எழில்நகர், திருச்சி – 620014.

- டி. கே. குணசேகரன், 11, கோபால் தெரு, தி. நகர்,
  சென்னை – 600017.

- வி. கோவிந்தன், பூனாம்பாளையம், மண்ணச்ச நல்லூர் வழி,
  திருச்சி.



படிப்பகம்

padippakam

- எம். மூர்த்தி, குடியிருப்பு, முந்தல்.
- பெ. ராஜசெல்வம், பிறவுன்லோ எஸ்டேட், மஸ்கெலியா.
- க. செல்வேந்திரன், 64, பசுமலை பஜார், அக்கரபத்தனை.
- அ. குமரேசன், 44/293 கிருலப்பனைத்திட்டம், கொழும்பு-6.
- ஜோதிப்பிரியா, யடிநுவர, தட்டுமாவத்த, கண்டி.
- ஏ. ஜே. எம். பைசர், 61/சி, பீர்ஸாயிபு வீதி, கொழும்பு-12.
- ஏ. எஸ். ரவி - ரவீந்திரன், பன்சல வீதி, மடுல்சீமை.
- க. மோகன்ராஜ், 26, மெயின் வீதி, அக்கரபத்தனை.

## வாக்காளர்கள்

ஒன்றைப்
பத்தாகவும்
நூறாகவும்
ஆயிரமாகவும்
இலட்சமாகவும்
கோடியாகவும்
ஆக்கிக்காட்ட
உதவும்
வெறும்
பூஜ்யங்கள்!

- அறிவுமதி.

உறவு கொள்ள ஒருவர், கேள்விப்பெட்டி பகுதிகளுக்கு தொடர்புகொள்ள விரும்புவோர் பின்வரும் முகவரிகளை வெட்டி (தபால் அட்டையில் மட்டும்) ஒட்டி அனுப்பவும்.

கேள்விப் பெட்டி,
கொந்தளிப்பு,
88/2, டன்பார் வீதி,
அட்டன்.

தொழிலில் வெற்றியோ தோல்வியோ ஏற்படுவது திறமையைப் பொறுத்தது மட்டுமல்ல, அதைக் காட்டிலும் மனோபாவம் தான் முக்கியம்.''

-டாக்டர் வால்ட்டர் டில்ஸ்காட்.

உறவு கொள்ள ஒருவர்,
கொந்தளிப்பு,
88/2, டன்பார் வீதி,
அட்டன்.



படிப்பகம்

padippakam

# உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தும் உண்மைகள்

**- மணியன்**

பிரதேச சபை அமைக்கப்பட்ட பின் நடத்தப்பட்ட முதலாவது உள்ளூராட்சி தேர்தலில் 237ல் ஐ. தே. க. 193ஐ கைப்பற்றியது. எதிரணிக்குக் கிடைத்தவை 44 சபைகள் மட்டுமே ஆகும்.

## அவசரம் ஏன்

1987ல் நடத்தப்படவிருந்த இத்தேர்தல் பல தடவை பின் போடப்பட்டு அவசர அவசரமாக நடத்தப்பட ஜனாதிபதி முடிவெடுத்தமைக்குப் பல காரணங்கள் உண்டு.

பலம் வாய்ந்த கூட்டமைப்பாக உருவாக இருந்த எதிரணிகளின் ஐக்கியத்தை சீர்குலைப்பது அவசரத் தேர்தலின் முதலாவது காரணம்! இக்கூட்டமைப்பு உருவாக்கப்பட்டால் தமது கட்சியின் வெற்றி சுலபத்தில் கிடைக்கும் ஒன்றல்ல என்பதை ஜனாதிபதி நன்றாகவே உணர்ந்திருந்தார்.

## மக்களின் ஆணை

தன்னுடைய அல்லது அரசினுடைய அதிகார பலம் பலவீனப்படாமல் பாதுகாக்க மக்கள் ஆணையை எவ்வழியிலேனும் பெற்று மேலும் அதிகாரங்களைக் குவித்துக் கொள்ள வேண்டிய தேவை மற்றுமொரு காரணம்!

மிக சொற்ப அதிகப்படியான வாக்குகளைப் பெற்று தற்செயலாக ஜனாதிபதி பதவியைப் பிடித்த பிரேமதாச அவர்களுக்கு, கட்சியினுள்ளும் நாட்டிலும் தனக்கு எதிராக உள்ள சக்திகளை ஒடுக்குவதற்கு மக்களின் ஆணையைப் பெறும் எண்ணம் ஆட்சிக்கு வந்த நாள் முதல் இருந்து வந்தது.

அதேவேளை, தான் இதுவரை செய்து வந்த நடவடிக்கைகளை மக்கள் அங்கீகரிக்கின்றனர் என்று உலகுக்கு எடுத்துக்காட்டிவிட வேண்டும் என்பதும் அவரது எண்ணமாக இருந்து வந்தது.



படிப்பகம்

padippakam

இவற்றை நிறைவேற்ற பாதுகாப்பான துரும்பாக இத்தேர்தலை அவர் தேர்ந்தெடுத்தார்.

ஜனாதிபதி எதிர்பார்த்தது போலவே எதிரணியினர் குறிப்பிட்ட சில இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் ஐக்கியமாக நின்று தேர்தலில் வெற்றிகாண முடியவில்லை.

மேற்சொன்ன சில இடங்களிலும் கூட தமது கருத்து ஒற்றுமையை முழுமையாக அவர்களால் நிலைநாட்ட முடியவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி தனக்குள் மிகவும் நெருக்கடியாகத் தோன்றிய கருத்து முரண்பாடுகளைக் கொண்டிருந்தும், எதிரணியினரின் ஐக்கியமின்மையை கூடுமானவரை தனக்கு சாதகமாக திசை திருப்புவதில் வெற்றி கண்டது.

## எதிரணியின் பலவீனம்

ஆளுவோருக்கெதிராக எண்ணற்ற பிரச்சினைகள் இருந்த போதிலும், எதிரணி அவைகளை தமது பிரச்சாரங்களின் போது முறையாகக் கையாளாமல் போனதுடன் தமது பலவீனங்களை வெளிப்படுத்தியமை இத் தேர்தலில் தெளிவாக தெரிந்தது.

ஜனாதிபதி கூறிக்கொள்வது போல, எதிரணி மீது ஐ. தே. க. கொண்ட வெற்றியானது ஜனநாயகத்தின் வெற்றி என்றும், ஐ. தே. க. யின் புதிய சிந்தனைகள் – செயற்பாடுகள் மீது மக்கள் வைத்த நம்பிக்கை என்றும் கொள்ளலாம். கட்சிக்குள் தம் எதிரிகளை முடங்கச் செய்து தன் பெருமையினை நிலை நாட்டிய வகையிலும் ஜனாதிபதிக்கு இது வெற்றி என நாம் கருதலாம்.

## முகமூடி ஜனநாயகம்

ஜனநாயகத்தைப் பற்றி பேசுவோரின் பேச்சில் ஜனநாயத்தைப் பற்றி ஒன்றுமே இல்லாமலும் மறைமுகமாகவும் இருப்பதையும், உண்மையான ஜனநாயக முகமூடியணிந்து மக்களை ஏமாற்றுகின்ற அரசியல் சக்திகள் என்ன என்றும் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் மூலம் அரசியல் அதிகாரத்துக்கு வந்தும் அப்படியே செயற்பட்டவர்கள் யார் என்பதைப் பற்றியும் கலந்துரையாடினால் அது மிகவும் பொருத்தமாகவும் உபயோகமானதாகவும் இருக்கும். ஆனால் அதனை சற்று பின்போட்டுவிட்டு தேர்தல் முடிவுகள் மூலம் வெளிப்



படிப்பகம்

padippakam

படும் உண்மைகளை இங்கு எடுத்து ஆய்வது இந்த நேரத்துக்கு உகந்ததாக அமையலாம் என எண்ணுகிறோம்.

தேர்தல் முடிவுகளை ஆய்வுக்கு உட்படுத்தும் போது 1989 பொதுத் தேர்தல் முடிவுகளுடன் ஒப்பிடுவது பொருத்தமானது.

## ஐ. தே. க.யின் பின்னடைவு

மேலோட்டமாக பார்க்கும் போது ஐ. தே. க.யின் பின்னடைவினையும் எதிரணியின் வளர்ச்சிப் போக்கினையும் அட்டவணை 1ல் காணலாம்.

**அட்டவணை 1**

| வருடம் | கட்சிகள் | | | |
|---|---|---|---|---|
| | ஐ. தே. க. யும் நேச அணியும் | | முஸ்லிம் காங். நீங்கலாக எதிரணிக் கட்சிகள் | |
| 1989 | 26 80 000 | | 19 36 000 | |
| 1991 | 28 57 500 | | 24 68 200 | |
| அதிகரிப்பு | 17 75 000 | 6 6 % | 5 32 200 | 27.5 % |

ஐ. தே. க.யின் வளர்ச்சி 6.6 % எதிரணியின் வளர்ச்சி 27.5% ஆக இருப்பதை அட்டவணை காட்டுகிறது. எதிரணி அனைத்தும் ஐக்கியப்பட்டு பலமான அமைப்புடன் தேர்தலில் மோதியிருப்பின் அவர்களின் வெற்றி வாய்ப்பு பிரகாசமானதாக இருந்திருக்கும்.

## 5 மாவட்டங்களில் சவால்

மாவட்ட ரீதியாக 10/17ல் ஐ. தே. க. அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது. கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் எதிரணி ஐ. தே. க.யிற்கு சவாலாக விளங்கின.

மாத்தறை, காலி, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் மிகச் சொற்ப வாக்குகளால் எதிரணி வெற்றி வாய்ப்பை நழுவ விட்டுள்



படிப்பகம்

padippakam

ள்ளது. ஒன்றுபட்ட சக்தியாக முயற்சித்திருந்தால் சுலபமாக வெற்றி நிச்சயமாகியிருக்கும்.

கொழும்பு, கம்பஹா, கேகாலை, குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் 1989ல் பெற்ற வாக்குகளைவிட குறைவானது. இதனை அட்டவணை 2 காட்டுகிறது.

அட்டவணை 2

| வருடம் | கொழும்பு | கம்பஹா | கேகாலை | குருணாகல் | புத்தளம் |
|---|---|---|---|---|---|
| 1989 | 374530 | 385733 | 174374 | 314724 | 139354 |
| 1991 | 348474 | 251584 | 171142 | 295536 | 109375 |
| குறைவாக பெற்ற வாக்குகள் | 26066 | 134149 | 3232 | 19188 | 29979 |
| சதவீதம் | 6.96 | 34.78 | 1.85 | 6.07 | 21.5 |

இதற்கு மாறாகக் கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் எதிரணிகளின் சக்தி 1989 ஐ விட அதிகரித்துள்ளது. கம்பஹாவிலும் சொற்ப வாக்குகளே வித்தியாசம். இதனை அட்டவணை 3 தெளிவாக்குகிறது.

அட்டவணை 3

| வருடம் | கொழும்பு | கம்பஹா | கேகாலை | குருணாகல | புத்தளம் |
|---|---|---|---|---|---|
| 1989 | 313892 | 316155 | 97464 | 210269 | 75052 |
| 1991 | 364834 | 246927 | 127445 | 245595 | 96152 |
| குறைந்த கூடிய வாக்குகள் | 50942 | – 69228 | 29984 | 35326 | 21100 |
| சதவீதம் | 16.23 | – 29.9 | 30.76 | 16.80 | 28.13 |



படிப்பகம்

padippakam

## எதிரணியும் ஐ. தே. க.வும் சம அளவில்

ஏனைய மாவட்டங்களில் ஐ. தே. க. பெற்றுள்ள வளர்ச்சியைப் போன்றே எதிரணிகளும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது (பதுளை மாவட்ட 1989 புள்ளி விபரங்கள் பெற முடியவில்லை. எனினும் அங்கு ஐ. தே. க, எதிரணிகளை விட அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது) 6|11ல் எதிரணி பெற்றுள்ள வாக்குகள் ஐ. தே. க.வை விட அதிகமாகும். ஐ. தே. க. மகிழ்ச்சியடையக் கூடிய அளவு தனது அடித்தள வளர்ச்சியை மொனராகல, பதுளை, இரத்தினபுரி நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் கொண்டுள்ளது. இங்கு எதிரணியை விடவும் ஐ. தே. க. கூடுதலான வாக்குகளைப் பெற்றுள்ளது. இதனால் வெளிப்படும் உண்மையானது 4 மாவட்டங்களில் மட்டுமே ஐ. தே. க. தனது செல்வாக்கை அதிகரித்துக் கொண்ட போதிலும் 11 மாவட்டங்களில் எதிரணி வளர்ச்சி கண்டுள்ளது என்பதே!

5/6 சபைகளில் தாங்கள் வெற்றியீட்டிக் கொண்டதாக ஐ. தே. க. மார்தட்டிக் கொண்டாலும் உண்மை நிலை அதுவல்ல என்பதை புள்ளி விபரங்கள் தெளிவு படுத்துகின்றன. பின்னடைவானது ஐ. தே. க. க்கும் எதிரணிக்கும் பொதுவானது என்பதை அட்டவணை 4 உணர்த்துகிறது.

---

## எண்ணப்படியே எல்லாமும்!

ஒருவன் இருதயத்தில் என்ன எண்ணம் இருக்கிறதோ அதன்படிதான் அவன் ஆகிறான்.' ஒவ்வொரு மனிதனும், அவனுடைய நம்பிக்கையையும் சிந்தனையையும் வைத்து அவனை அவனே படைத்துக் கொள்கிறான்.

உலகத்தின் எந்தப் பகுதியானாலும் சரி, மனிதர்கள் மனிதர்கள்தான்! எல்லோருடைய உணர்வுகளும் ஒரே மாதிரி துடிப்புகள்தான்! அவர்களைப் போன்ற தனிப்பட்ட மனிதர்கள் சேர்ந்ததுதான் நகரம், கிராமம், தொழில் எல்லாம்! அவர்களுடைய நம்பிக்கை, சிந்தனை எப்படி இருக்கின்றனவோ அதை வைத்துத்தான் அவையும் இயங்குகின்றன.

- சாலமன் மன்னன்.



படிப்பகம்

padippakam

| மாவட்டம் | கட்சி | 1989 | 1991 | அ. க. வாக்குகள் | சதவிதம் |
|---|---|---|---|---|---|
| களுத்துறை | ஐ.தே.க.<br>எதிரணி | 160069<br>146541 | 189684<br>192372 | 29615<br>45133 | 18.5<br>31.3 |
| கண்டி | ஐ.தே.க.<br>எதிரணி | 204973<br>110942 | 263992<br>178118 | 59019<br>67176 | 28.8<br>60.6 |
| மாத்தளை | ஐ.தே.க.<br>எதிரணி | 88869<br>48061 | 94748<br>65463 | 5879<br>17402 | 6.6<br>36.2 |
| நுவரெலியா | ஐ.தே.க.<br>எதிரணி | 109853<br>51342 | 149032<br>61398 | 39179<br>10056 | 35.66<br>19.59 |
| மொனராகலை | ஐ.தே.க.<br>எதிரணி | 46313<br>41210 | 66871<br>49234 | 20558<br>8024 | 44.4<br>19.8 |
| இரத்தினபுரி | ஐ.தே.க.<br>எதிரணி | 126393<br>140683 | 170823<br>172736 | 44430<br>32053 | 35.2<br>19.8 |
| காலி | ஐ.தே.க.<br>எதிரணி | 183962<br>172926 | 195064<br>191705 | 11102<br>18779 | 6.03<br>10.9 |
| மாத்தறை | ஐ.தே.க.<br>எதிரணி | 45734<br>34290 | 152131<br>136321 | 106397<br>102031 | 232.6<br>297.6 |
| அம்பாந்தோட்டை | ஐ.தே.க.<br>எதிரணி | 31639<br>24793 | 105728<br>110579 | 74089<br>85786 | 274.2<br>346.0 |
| அநுராதபுரம் | ஐ.தே.க.<br>எதிரணி | 92726<br>66265 | 137470<br>109289 | 44744<br>43024 | 48.3<br>64.9 |
| பொலன்னறுவை | ஐ.தே.க.<br>எதிரணி | 43473<br>24338 | 61273<br>51319 | 17800<br>27481 | 40.9<br>112.9 |

ஃ இங்கே ஐ. தே. க. விற்கு எதிரான சக்திகளனைத்தும் எதிரணியாகக் கருதப்பட்டுள்ளது. இப்புள்ளி விபரம் எடுத்துக் காட்டுவதென்ன? இடதுசாரிகளின் ஒன்றுபடாத தன்மையே ஐ. தே. க.வின் வெற்றி என்பதையே!

**எதிரணிகளின் பிளவுகளால்:**

அநேக இடங்களில் எதிர்க்கட்சிகள் பிளவுபட்டு போட்டியில் இறங்கியதால் கிடைத்த மொத்தவாக்குகளில் ஐ. தே. கயைவிட அதிகமாகப் பெற்றிருந்தும் சுலபமாக கைப்பற்றி இருக்கக் கூடிய பிரதேச சபைகள் 31 நகரசபை 04 (தெஹிவல—கல்கிஸ்ஸ, கண்டி, காலி, பதுளை) ஆகியவைகளை பறிகொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.



படிப்பகம்

padippakam

எதிரணிகள் ஒன்றுபட்டு நல்லதோர் போட்டியைத் தொடுத்திருந்தால் மேலும் 12 பிரதேச சபைகளையும் 02 நகர சபைகளையும் கைப்பற்றி இருக்கலாம்.

எனவே ஐ. தே. க வசமான 50 சபைகள் எதிரணிக்குக் கிடைக்க வேண்டியவை கை நழுவிப் போனதற்கு எதிர்க்கட்சிகளின் பிளவைத் தவிர வேறு எந்தவித காரணமும் இல்லை.

## ஜனநாயக விரோத நடவடிக்கைகள்

மறுபுறம் நோக்கினால் அரசினதும் ஜனாதிபதியினதும் அதிகாரங்களையும் வரப்பிரசாதங்களையும் பிரயோகித்து பொதுஜனத் தொடர்பு சாதனங்களை குத்தகை எடுத்தது போல தங்கள் பிரச்சார நோக்கங்களுக்காகப் பயன்படுத்தியமை போன்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகள், எதிர்க்கட்சிகளின் பிரச்சார பலத்தை செயல் இழக்கச் செய்ததோடு எதிரணியில் ஒன்று சேர முயற்சித்த சக்தி ளைத் தடுத்தாட் கொள்ள உதவியது.

முன்னரைப் போல படு மோசமான தேர்தல் ஊழல்கள் நடைபெறவில்லையெனினும் பல இடங்களில் கள்ள வாக்குகளளித்தல், வாக்களிக்காமல் தடுத்தல் போன்ற செயல்கள் சட்டத்தை மதிக்காமல் நடைபெற்றன என்பதை நிராகரிக்க முடியாது.

## தங்களையும் மக்களையும் ஏமாற்றிக்கொள்ளல்

இதுவரை நாம் பார்த்த தேர்தல் முடிவுகளின் உண்மைகள் எமக்கு உணர்த்துவது இதுவே! 'மக்கள் அரசின் செயற் திட்டங்களை நம்பிக்கையுடன் ஏற்று மீண்டும் ஒருமுறை உறுதி படுத்தி உள்ளனர் என்று கூறிக் கொள்வது, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதுடன் மக்களையும் ஏமாற்றும் செயல்' என்பதாகும்.

எதிர்க்கட்சிகள் ஐக்கியமாக ஒரு மனதோடு போராடி இருந்தால் முடிவுகள் நிச்சயமாக நேருக்கு மாறானதாக அமைந்திருக்கும். கடந்த 14 வருடங்களாக மக்களையும் நாட்டையும் பாதாளத்துக்குத் தள்ளியுள்ள ஆளும் கட்சியை எதிர்காலத்திலும் பாதுகாக்கவே பிளவுபட்ட எதிர்க்கட்சிகள் உதவுகின்றன.

## ஸ்ரீ. ல. சு. கட்சியால் தனித்து முடியாது

உள்ளூராட்சித் தேர்தல்கள் காட்டுகின்ற மற்றுமொரு முக்கிய அம்சம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்து நின்று ஐ. தே. க.வை பின்வாங்கச் செய்ய முடியாது என்பதை தெளிவு படுத்துவதாகும்.



படிப்பகம்

padippakam

7 மாவட்டங்களில் மட்டுமே ஸ்ரீ. ல. சு. க. அதிக எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்றுள்ளது. 9/10 மாவட்டங்களில் ஐ. தே. க. கூடுதலான வாக்குகளைப் பெற்றுள்ளது. அட்டவணை 5 இதனைத் தெளிவுறுத்துகிறது. ஸ்ரீ. ல. சு. க.யின் சில தலைவர்கள் கூறுவது போலல்லாது இடது சக்திகளோடு கொண்டுள்ள இணைப்பின் மூலமே தேர்தலில் ஐ. தே. க.வை பின்னடைவு செய்ய முடியும் என்பதை முடிவுகள் உணர்த்துகின்றன.

*1989ஐ விட அதிகரித்த வாக்குகளின் அடிப்படை ஐ.தே.க./ஸ்ரீ.ல.சு.க. பெற்ற அதிகப்படி வாக்குகள்.*

| மாவட்டம் | ஐ. தே. க. | ஸ்ரீ. ல. சு. க. |
|---|---|---|
| கொழும்பு | – 26055 | – 17099 |
| கம்பஹா | – 134148 | – 85129 |
| களுத்துறை | 29615 | 29856 |
| கண்டி | 59019 | 55534 |
| மாத்தளை | 5879 | 3668 |
| நுவரெலியா | 39317 | 6201 |
| காலி | 11102 | 1489 |
| மாத்தறை | 106397 | 72765 |
| அம்பாந்தோட்டை | 74089 | 82832 |
| குருநாகல் | – 25148 | 11354 |
| புத்தளம் | – 29979 | 4924 |
| அநுராதபுரம் | 44744 | 40563 |
| பொலன்னறுவை | 17800 | 26075 |
| இரத்தினபுரி | 44430 | 14273 |
| கேகாலை | – 3192 | 12722 |
| மொனராகல | 20558 | 8436 |



படிப்பகம்

padippakam

● கொழும்பில் ஸ்ரீ. ல. சு. க.யின் வாக்குகள் குறைந்துள்ளமைக்குக் காரணம் சுயேட்சையாகப் போட்டியிட்டமையாகும். சுயேட்சைக் குழுவிற்குக் கிடைத்த 72000 வாக்குகளில் 50000 ஸ்ரீ. ல. சு. க. க்கு உரியதெனக் கொண்டால் கொழும்பில் ஸ்ரீ. ல. சு. க.யின் வாக்குகள் குறையவில்லை எனக் கொள்ளலாம்.

## இடதுசாரிகளின் வளர்ச்சி

1989 தேர்தலுடன் ஒப்பிட்டால் இத்தேர்தலில் இடதுசாரிகளின் நிலைமை ஓரளவு திருப்திகரமாக வளர்ச்சியடைந்துள்ளமையைக் காண முடிகிறது. 1989ல் (பதுளை நீங்கலாக) ஐ. சோ. மு.க்குக் கிடைத்த வாக்குகள் 157908. பிரிந்து நின்று அச்சக்திகள் பெற்ற மொத்த வாக்குகள் 305097. அதிகம் 148089 ஆகும். (93.78%). கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சிகள் ஸ்ரீ. ல. சு. க.யுடன் உடன்பாடு கொண்டதனால் இதில் சிறுசிறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. எனினும் அவை பாரதூரமானவையல்ல. உடைந்து சிதறிப் போகாமல் ஐ. சோ. மு.ஐ பாதுகாத்துக் கொண்டு செயல்பட்டிருந்தால் இதற்கும் மேலாக வாக்குகளைப் பெற்றிருக்க முடியும்

இடது சக்திகள் பலமிக்க அடித்தளத்தோடு எதிர்க்கட்சிகளுடன் பங்குதாரராக இருந்திருந்தால் ஐ. தே. க.யை தோற்கடித்து இருக்கலாம். அதுமட்டுமல்ல தங்கள் தனித்துவத்தை இன்னும் பரவலாக்குவதற்கும் இடமிருந்தது.

ஸ்ரீ. ல. சு. கட்சியும் வளர்ச்சி பெற்றிருப்பது உண்மையே! விரும்பியோ விரும்பாமலோ இது ஸ்ரீ. ல. சு. கட்சிக்குக் கிடைத்துள்ளது. குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு இடது சக்திகளுக்குக் கிடைத்த வளர்ச்சியை ஸ்திரபபடுத்திக் கொள்ள அவை முயல வேண்டும்.

## மக்கள் கட்சி......

மக்கள் கட்சி இரண்டுபட்ட பின்பும் இரண்டாவது அணி தனித்து நின்று 141746 வாக்குகளைப் பெற்று 68 ஆசனங்களைப் பெற்றதையிட்டு அக்கட்சி மகிழ்ச்சி கொள்ளலாம். நவசமசமாஜக் கட்சியும் 46477 வாக்குகள் பெற்று 20 ஆசனங்களைத் தனது வசமாக்கிக்கொண்டது. எனினும் தனித்தனியாகப் போட்டியிட்டு தாம் பெற்ற வாக்குகளையும் ஆசனங்களையிட்டும் பெருமைப்பட்டு இறுமாப்புக்கொண்டால் எதிர்காலத்தில் இவை முடமாகி மூலையில் ஒதுங்க வேண்டிய நிலைமையே ஏற்படும்.


படிப்பகம்

padippakam

## முஸ்லிம் காங்கிரஸ் தோல்வி

இந்த இடத்தில் மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். முஸ்லிம் காங்கிரஸிற்கு மக்கள் அளித்த தீர்ப்பு, 1989ஐ விட மகிழ்ச்சி தரக்கூடியதல்ல, அப்போது கிடைத்த 69556 வாக்குகளுக்குப் பதிலாக 1991ல் 14 மாவட்டங்களிலும் 55468 கிடைத்தன. 14088 குறைவு. (20.03%) குறிப்பிட்ட சில மாவட்டங்களில் மு. கா. அடைந்த பின்னடைவு அட்டவணை இல. 6ல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 6

| கொழும்பு | களுத்துறை | கண்டி | புத்தளம் | காலி | அம்பாந்தோட்டை |
|---|---|---|---|---|---|
| 65.5% | 71.0% | 19.0% | 15.6% | 73.8% | 250.0% |

முஸ்லிம் மக்கள் இன, மத ரீதியில் தமது சிந்தனையை முற்று முழுதாக செலுத்தி விடவில்லை என்பதையே தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன.

## நகர பகுதிகளில் ஐ. தே. க.வின் வீழ்ச்சி

நகர பகுதிகளில் ஐ. தே. க.வின் செல்வாக்கு பின்தள்ளப்பட்டுள்ளது. உதாரணமாக மேல் மாகாணத்தில் ஐ. தே. க.வின் பின்னடைவையும் எதிர்க்கட்சிகளின் வளர்ச்சியையும் காணலாம்.

அட்டவணை 7

| ஐ. தே. க | எதிரணி | அதிகரிப்பு | சதவீதம் |
|---|---|---|---|
| 779742 | 804133 | 24391 | 3.13 |

## தோட்ட, கிராமியப் பகுதிகளில் செல்வாக்கு

இதேவேளை ஐ. தே. க. தோட்டப் பகுதிகளிலும் கிராமியப் பகுதிகளிலும் தனது செல்வாக்கை தொடர்ந்தும் நிலைநாட்டியுள்ளது.



படிப்பகம்

padippakam

நுவரெலியா, பதுளை, மாத்தளை, மொனராகல மாவட்டங்களில் இத்தகைய நிலைமை உள்ளதை அட்டவணை 8ல் காணலாம்.

அட்டவணை 8

| மாவட்டம் | நுவரெலியா | பதுளை | மாத்தளை | மொனராகல |
|---|---|---|---|---|
| ஐ. தே. க. | 109853 | 139042 | 94748 | 66871 |
| எதிரணி | 51342 | 65662 | 65463 | 49224 |
| அதிகரிப்பு | 58511 | 73480 | 29285 | 17637 |
| சதவீதம் | 113.96 | 111.91 | 44.74 | 35.82 |

இவ்வாறே மாற்றமடைந்த இடங்களும் இல்லாமலில்லை. இரத்தினபுரியில் கிடைத்த வாக்குகள் சதவீதத்தில் எதிரணி பின்தங்கி விட்டது. முழு வாக்குகள் எண்ணிக்கையில் எதிரணி முன்னேற்றம் கண்டாலும் 1989 தேர்தலுடன் ஒப்பிடும்போது ஐ. தே. க.விற்கே வளர்ச்சி!

தெற்கிலே ஐ. தே. க.வும் எதிரணியும் சமமான நிலையில் உள்ளன. அநுராதபுரம், பொலனறுவை மாவட்டங்களில் ஐ.தே.க.வின் வளர்ச்சி மோசமாக உள்ளதெனினும் எதிர்க்கட்சிகளைவிட முன்னணியிலேயே நிற்கிறது.

## தேர்தலின் முடிவுகள் கூறுவதென்ன?

முடிவாக ஒட்டு மொத்தமாக உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் எமக்கு உணர்த்தியுள்ள செய்திகளை பின்வருமாறு வகுக்கலாம்.

❀ அரசு வெற்றி பெற்றிருந்தாலும் அரசின் மீதுள்ள அதிருப்தி வெளிப்பட்டுள்ளது.

❀ ஐ. தே. க. போலவே எதிர்க்கட்சிகளும் தங்கள் பலத்தை அதிகரித்துள்ளன.



படிப்பகம்

padippakam

ஃ ஸ்ரீ. ல. சு. கட்சி தனித்து நின்று ஒருகாலமும் ஐ. தே. க.யை வெற்றிகாண முடியாது.

ஃ இருக்கின்ற சூழ்நிலையில் இடது சக்திகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த ஐக்கிய எதிரணி மூலமே ஐ. தே. க.யை அகற்ற முடியும்.

ஃ இடது சக்தியை கட்டியெழுப்ப வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது. பொதுவாக இடது சக்திகளின் வளர்ச்சிக்கு வாய்ப்பு நிறையவே உண்டு.

---

## நடந்து முடிந்த தேர்தலின் முடிவுகள்:

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்கள்: | 8,625,145. |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: | 6,293,929 – 72.97% |
| செல்லுபடியான ,, ,, : | 5,704,990 – 90.64% |
| ஐ.தே.க. பெற்ற ,, ,, : | 2,910,438 – 51.02% |
| இ.தொ.கா. ,, ,, ,, : | 59,294 – 1.04% |
| அக்குரஸ்ஸ ஐ.தே.க. ஆதரவு சுயேட்சைக் குழு பெற்ற மொத்த வாக்குகள் : | 14,411 – 0.25% |
| ஸ்ரீ.ல.சு.க. ,, ,, ,, : | 1,996,820 – 35.00% |
| ஸ்ரீ.ல.சு.க. உள்ளிட்ட ஏனைய எதிரணிகள் பெற்ற மொத்த வாக்குகள் : | 2,720,847 – 47.69% |

---

# தெரிந்து கொள்ளுங்கள் இளையராஜாவின் முதல் படம்

'அன்னக்கிளி' வெளிவருவதற்கு ஆறு வருடங்களுக்கு முன்பே தாதாமிராசி டைரக்ஷனில் ஜெமினி கணேசன், பத்மினி நடித்த தீபம் இளையராஜா இசையமைத்த முதல் படம்! துரதிஷ்டவசமாக இப்படம் வெளிவரவில்லை. முதல் பாடலை எழுதியவர் கங்கை அமரன்.



படிப்பகம்

padippakam

# சலுகைகள் பறிபோய் விடுமா?

## தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப் படுவது குறித்து எழுந்துள்ள ஐயம்

நாட்டில் உள்ள பெருந்தோட்டத்துறை தனியாரிடம் கையளிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாகத் தகவல்கள் வெளியாவதைத் தொடர்ந்து பல்வேறுபட்ட கேள்விகளும் சந்தேகங்களும் எழுப்பப்படுகின்றன.

தோட்டங்கள் தனியாருக்கு வழங்கப்பட்டால் ஏற்படும் தாக்கம் குறித்து கலந்துரையாட அண்மையில் கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பு, தொழிலாளர் பொழில் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மத்திய மாகாண சபையின் கௌரவ உறுப்பினர்களான திரு. ஓ. ஏ. இராமையா, திரு. பி. வி. கந்தையா ஆகியோரும் மற்றும் தொழிற்சங்க, தொண்டர் ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டனர். தொழிற்சங்க, தொண்டர் நிறுவனங்களின் இணைப்புக்குழுவின் ஆதரவில் நடைபெற்ற மேற்படி கூட்டம் கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பின் அட்டன் அமைப்பாளர் திரு. மோகன் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களின் கருத்துக்கள் இங்கு தொகுத்து வழங்கப்படுகின்றன.

பெருந்தோட்டத்துறையின் நட்டத்தைக் காரணங்காட்டியும் பிரச்சினைகளைத் தட்டிக் கழிக்கவும் தனியார் மயப்படுத்த முயற்சி எடுக்கப்படுகிறது. தற்போது இரு கூட்டுத்தாபனங்கள் வழங்கும் சலுகைகள் தொழிலாளர்களுக்குக் கிடைக்காமல் போகலாம். ஆறு நாட்கள் வேலை வழங்கப்படுவது கட்டாயமில்லாமல் போகலாம்.

தனியார் மயப்படுத்தலை ஆதரிப்போர் கூறும் சமாதானம் என்னவென்றால், குடியேற்றத் திட்டங்கள் தடுக்கப்படலாம், தமிழ் முதலாளிகள் உருவாகலாம், தொழிலாளர்களுக்குப் பங்கு கொடுக்கப்படலாம் போன்றவைகளாகும்.

### தொழிற்சங்க உரிமை

தனியார் துறையினர் கையில் தோட்டங்கள் சென்றால்



படிப்பகம்

padippakam

தொழிற்சங்க உரிமை மறுக்கப்படலாம். இப்போது நாட்டில் உள்ள பல தனியார் தோட்டங்களில் இந்த நிலை உள்ளதை மறுக்க முடியாது. சுதந்திர வர்த்தக வலயம் போன்ற தனியார் துறைகளில் இந்த நிலை உள்ளதைக் காணலாம். காலனித்துவ ஆட்சியில் நடைபெற்ற அதே சுரண்டல் மீண்டும் இடம்பெறலாம்.

## 24 மணி நேர கட்டுப்பாடு

ஏனைய துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் 8 மணி நேர வேலை முடிந்ததும் சுதந்திரப் பறவைகளாகின்றனர். தனியார் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நேரம் முடிந்த பின்பும் முதலாளிகளின் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும்.

## ஒப்பந்தங்கள்

இப்போது தோட்டத்துறையின் இரு கூட்டுத்தாபனங்களோடும் செய்து கொள்ளப்படும் பல ஒப்பந்தங்களால் வேலை மறுப்பு ஊதிய உயர்வு, குறைப்பு போன்ற பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுகிறது. தனியார் வசமானால் இந்த ஒப்பந்தங்கள் அவர்களைக் கட்டுப்படுத்தாது.

## காணி, வீடு

அரசு மனது வைத்தால் ஒரு மணித்தியாலத்தில் தோட்டத் தொழிலாளர்க்கு காணியையும் வீடுகளையும் சொந்தமாக்க முடியும். தனியாரிடம் இதனை எதிர்பார்க்க முடியாது. அரசுக்குள்ள நிர்ப்பந்தம் இனி இருக்காது.

## சமூக பாதிப்புகள்

கலை, கலாச்சார வளர்ச்சிக்கு தனியாரிடம் உதவி கேட்க முடியாது. அரசியல் பற்றி பேசவும் அனுமதி பெறவேண்டிய நிலை உருவாகும்.

## பதில் சொல்லும் கடப்பாடு

இப்போது அரசு பலவிதங்களில் தொழிலாளர்க்குப் பதில் சொல்லும் நிலையில் உள்ளது. எதிர்காலத்தில் இந்த நிலை அற்றுப் போகும்.

## குடியிருப்பு திருத்தங்கள்

தற்போதுள்ள பல தனியார் தோட்டங்களில் குடியிருப்புகள்



படிப்பகம்

padippakam

திருத்தப்படுவதே இல்லை. அரசு தோட்டங்களில் உள்ள சலுகைகள் இவ்விசயத்திலும் இல்லாமல் போய்விடும்.

### திட்டம் இல்லை

தோட்டங்களைத் தனியாரிடம் ஒப்படைக்க திட்டப்படும் திட்டங்களைப் போல அதன் தீமைகளை எடுத்துக் கூறுபவர்களிடம் எந்தத் திட்டமுமில்லை.

எத்தகைய எதிர்ப்புகள் இருந்த போதிலும் நாட்டில் பல்வேறு துறைகள் இவ்வாறு சமீபகாலத்தில் தனியார்மயப் படுத்தப்பட்டுள் ளன. எனவே தோட்டங்களைப் பொறுத்தவரையிலும் அது நடக்க லாம்.

குறைந்த பட்சம் தனியார் வசம் ஒப்படைக்கும் முன் சில ஒப்பந்தங்களையாவது செய்து கொள்ளலாம்.

### வேண்டு கோள்கள்

- தோட்டங்கள் கிராம அமைப்பாக மாற்றப்பட வேண்டும்.
- சம்பள உயர்வுக்கு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும்.
- தொழிலாளர்களின் நல உரிமை பேணப்பட உறுதி.
- தொழிற் பிரச்சினைகளில் மற்றவர்களுக்கு இருக்கும் சலுகை கள் தொழிலாளர் சட்டம் மூலம் உத்தரவாதமளிக்கப்பட வேண்டும்.
- கம் உதாவ தோட்டப் பகுதிக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும்.
- வேலை வாய்ப்புகளைப் பெருக்க மாற்றுத் திட்டங்கள் முன் வைக்கப்பட வேண்டும்.

தமிழர்களும் சில தோட்டங்களுக்கு சொந்தக்காரர்களாக மாறுகிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக தனியார் மயத்தை ஆத ரிப்பது தவறு. ஏன் எனில் இப்போதும் கூட தமிழ் முதலாளிகள் பலர் தோட்டங்களுக்கு சொந்தக்காரர்களே!

---

''சத்திய சாயி பாபா செய்வதாகச் சொல்லப்படும் காரியங் கள் அனைத்துமே சித்து வேலையாகவே எனக்குத் தோன்று கின்றன''.

**கண்ணதாசன்** *(அ. இ. மதம் 3)*



படிப்பகம்

padippakam

# கவியோரம் வாடுகின்றேன் !

– தங்கம் –

காதோரம் சேதிசொல்லி கதவோரம் சாடைசொல்லி
கனவோரம் கதைகள் சொன்ன
மாதோரம் நான்செல்ல மனதோரம் அணைப்பெண்ணி
மகிழ்வோடு படுத்திருந்தேன் !
''தீதோரம் சென்றதுவோ தீயோரம் கொன்றதுவோ?''
திசையோரம் மாறக் கண்டேன்!
தூதோரம் செல்லுமுன்னர் துடிப்போரம் தள்ளுமுன்னர்
துவண்டிடவே மாறி விட்டாள்!

ஃ ஃ ஃ

நதியோரம் நானிருந்து நலமுறும் கவிபடைத்து
நயந்திருந்த வேளை தன்னில்
''சதியோரம் செல்லாதாள் சளைத்தோரம் தள்ளாதாள்
சரிதானே கிடைத்தா'' ளென்று
விதியோரம் விளையாட விளங்காமல் நின்றதாலே
வீதியோரம் கிடந்து கொண்டு
சுதியோரம் சேராமல் சோர்ந்தின்று பாடுகின்றே
சுவையோரம் காண வில்லை !

ஃ ஃ ஃ

பஞ்சோரம் சேர்ந்திருந்தாள் பழத்தோரம் அணைத்திருந்தாள்
பறந்தோரம் வந்திருந்தாள் !
நெஞ்சோரம் நினைவணைத்து நிழல் கூட நிலவணைத்து
நெடுநேரம் களித்திருக்க
மஞ்சோரம் சுமந்தவளை மலரோரம் பார்த்திருந்தேன்
மணமோரம் காண வில்லை !
நஞ்சோரம் எனைத்தள்ளி நடிப்போரம் காட்டிவிட்டு
நடையோரம் சென்று விட்டாள் !

ஃ ஃ ஃ

கண்ணோரம் பனிமலரும் காலோரம் எழில் நடையும்
கணக்காகக் கொண்ட மங்கை
எண்ணோரம் எழுத்தோரம் எந்நேரம் சென்றாலும்
இதழோரம் சுவையைத் தந்து
''பெண்ணோரம் வா'' வென்றே பித்தோரம் எண்ண வைத்தாள்
பேதையின்மேல் போதை விட்டு
மண்ணோரம் நான் சென்று மனதார உழைத்திருந்தால்
மாவிளைச்சல் கண்டிருப்பேன் !

ஃ ஃ ஃ

பாலோரம் நாடாமல் படுத்துசுகம் தேடாமல்
பசியோரம் வேர்த்திருந்து
நூலோரம் செல்லாமல் நுண்ணறிவைக் கொள்ளாமல்
நுதலோரம் இதழ்ப திக்க
ஆலோரம் நின்றிருந்தும் அதன்நிழலை எண்ணாமல்
''அவளோரம் போது'' மென்றேன்!
காலோரம் வலிநெக்கி காதலிலே தலைதாழ்த்தி
''கவியோரம்'' வாடு கின்றேன்!



படிப்பகம்

padippakam

# தொலைக் கல்வி என்றால்...

இன்று இலங்கையில் தொலைக் கல்வித் தத்துவங்களின் அடிப் படையில் பல உயர் கல்விப் பயிற்சி நெறிகளை திறந்த பல்கலைக் கழகமும் தேசிய கல்வி நிறுவனமும் கல்வி அமைச்சும் நடாத்தி வரு கின்றன. தொலைக் கல்வி, திறந்த கல்வி, அஞ்சல் மூலக் கல்வி என்ற வெவ்வேறு பெயர்கள் பெருமளவுக்கு ஒரே பொருளையே தரு கின்றன.

## உலக நாடுகளில்...

கடந்த 30 ஆண்டுகளாக உலகளாவிய ரீதியில் தொலைக்கல்வி மீதான அக்கறை பெருகியுள்ளது. ஆயினும் சென்ற நூற்றாண்டி லேயே அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா போன்ற நாடுகளில், தூரப் பிரதேசங்களில் வாழ்ந்த மாணவர்களுக்கென அஞ்சல் மூலப் பயிற்சி நெறிகள் பயன்படுத்தப்பட்டன.

பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (பி. பி. சி.) கடந்த 60 ஆண்டுகளாக கல்வி ஒலிபரப்பை நடாத்தி வருகிறது. 1960களில் பொட்ஸ்வானா, மாளவி ஆகிய நாடுகள் தமது ஆசிரியர்களைப் பயிற்ற தொலைக் கல்வி முறைகளைப் பயன்படுத்தின.

## இரு அம்சங்கள்

- தொலைக் கல்வி அணுகு முறைகள் கல்வியை மக்கள் மத்தியில் நன்கு விரிவுபடுத்த உதவின.
- தொலைக் கல்வி முறைகள் கற்பித்தலை விடுத்துக் கற்றலை வலியுறுத்தின.

## தமது வசதிக்கேற்ப...

தொலைக் கல்வி ஏற்பாடுகள் மாணவர்கள் தமதாற்றலுக் கேற்ப மெதுவாகவோ விரைவாகவோ கற்கும் வாய்ப்பினை வழங்கு கின்றன. மேலும் தங்களுக்கு வசதியான நேரத்தில் அவர்கள் கற்றுக் கொள்ள முடியும்.

## குறைந்த செலவில்...

தொலைக் கல்வி முறைகள் மூலம் குறைந்த செலவில் சிறந்த



படிப்பகம்

padippakam

பயிற்சியை வழங்க முடியும் என அரசாங்கங்கள் இன்று உணர்ந்துள்ளன.

## பகுதி நேரக் கல்வி

இன்று பலரும் பகுதி நேரக் கல்வியை விரும்புகின்றனர். குடும்பப் பொறுப்புள்ள வளர்ந்தோர் உழைத்துக் கொண்டே தமது கல்வித் தகுதிகளை மேம்படுத்த விரும்புகின்றனர். ஒரு நிறுவனத்தில் முழுநேர மாணவனாகச் சேர்ந்து, நாள் தோறும் பயணஞ் செய்து படிப்பதைவிட வீட்டிலிருந்து கொண்டே பயிலப் பலர் விரும்புகின்றனர்.

## தொலைக் கல்வியும் இலங்கையும்

கல்வி இன்று ஓர் ஆயுட்கால எண்ணக்கருவாக மாறியுள்ளது. அதி விரைவாக விரிந்து செல்லும் அறிவுப் பொக்கிஷத்தை முறைசார் கல்வித் தொகுதியின் ஊடாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் வரையறைக்குட்பட்டவையாகும் அத்தடைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கான ஒரு மாற்று வழியே தொலைக் கல்வியாகும்.

## அஞ்சல் மூல ஆசிரியர் பயிற்சி நெறி

இப்பாட நெறிகளுக்காக ஆக்கங்களும் நேரடி அமர்வுகளும் நடத்தப்படுகின்றன. ஆசிரியர் கல்விப் பாடநெறியை நடாத்தும் பொறுப்பு கல்வியமைச்சின் தொலைக் கல்விக் கிளையிடம் ஒப்படைக்கப்பட்டது இக் கருமத்தின் போது சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட ஆசிரியர் தொலைக் கல்வி மாதிரிக்கு அமைய பாடநெறி விடயங்கள் தயாரிக்கப்பட்டு, பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி, பூரணமான ஆலோசனைச் சேவையைப் பெற்று பண்பளவில் சிறப்பான மட்டத்தில் ஆசிரியர் கல்வியை வழங்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப, புத்துருவாக்கப்பட்ட தொலைக் கல்வித் தொகுதியுள் பின்வரும் அம்சங்கள் புகுத்தப்பட்டன.

- பூரணமான கற்றல் அழகு. (மொடியூல்)
- ஒப்படைகள் மூலம் நிகழும் இருவழித் தொடர்பாடல்.
- நேரடி அமர்வுகள்.
- செயன்முறை அமர்வுகள்.
- ஆலோசனைச் சேவைகள்.
- பாடசாலைகளின் கல்விப் பிரயோகக் கருமத் தொடர் அபிவிருத்தி.
- செவிபுலக் கட்புலச் சாதனங்கள்.



படிப்பகம்

padippakam

தற்போது உலகில் காணப்படும் தொலைக் கல்வித் தொகுதிக ளுடன் ஒப்பிடும்போது, இலங்கையின் நிலை சிறப்பு மட்டத்தில் நிலவு கின்றமையை 'யுனெஸ்கோ' கல்வியியலாளர்கள் ஏற்றுக்கொண் டுள்ளனர்.

**ஊடகங்கள்**

நமது தொலைக் கல்வி ஆசிரிய மாணவர்க்காக நேரடி அமர்வு கள், செயன்முறை அமர்வுகள், ஆலோசனைச் சேவை ஆகிய பல் வகை ஊடகங்களே பெருமளவுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. தொலைக் கல்வியின் பிரதானமான இருவழித் தொடர்பாடல் முறை யாகிய ஒப்படை, அவதானிப்பு, மதிப்பீடு, பின்னூட்டல் என்பன மிகக் குறுகிய காலத்துள் அதாவது இரண்டு வார காலத்துள் நிறைவு செய்யப்பட்டு மாணவர்கள் தத்தமது நடவடிக்கைகள் தொடர்பா கத் திருப்தியடைவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

## 27 நேரடி அமர்வுகள்

கல்வி வட்டங்கள், நேர்முக அமர்வுகள், செயன்முறை அமர்வு கள் போன்றவை உட்பட வருடத்துக்கு ஏறத்தாழ 27 நேரடி அமர்வு கள் நடத்தப்படுகின்றன. ஆசிரியர் வழிகாட்டுநர் வாரத்தில் இரண்டு நாட்கள் பாடசாலைக்குச் சென்று ஆசிரிய மாணவர்களுக்கு ஆலோ சனைச் சேவைகளை வழங்குவர்.

## 35,000 பயிலுனர் ஆசிரியர்கள்

தொலைக் கல்வி ஆசிரிய பாடநெறியில் ஒரே தடவையில் ஜன சவிய ஆசிரியர்களான 35,000 பேர் மூன்று வருட பயிற்சி பெற்று வருகின்றனர். 3 வருடங்களின் பின் பயிற்சியில் தேறியவர்களுக்கே பயிற்றப்பட்ட ஆசிரியர்க்குரிய சம்பளத்துடன் நிரந்தர நியமனம் வழங்கப்படும். உலகிலேயே இலங்கையில் தான் இவ்வாறு அதிக எண்ணிக்கையானவர்கள் ஒரே நேரத்தில் பயிற்றுவிக்கப்படுகின்றனர். இவர்களில் சுமார் ஏழாயிரம் பேர் தமிழ் மொழி மூல பயிலுனர்கள்.

வடகிழக்கு உட்பட சுமார் 230 நிலையங்களில் இப்பயிற்சி



படிப்பகம்

padippakam

இல்வாண்டு மார்ச் மாதம் முதல் நடைபெறுகிறது. தமிழ்மொழி மூல மான நிலையங்கள் சுமார் 40 ஆகும். வடக்கில் இன்னமும் நிலையங் கள் அமைக்கப்பட்டு வருகின்றன. நாடு முழுவதிலுமிருந்து பத்தா யிரம் ஆசிரியர்களில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 240 பேர் சிரேட்ட போதனாசிரியர்களாக நிலையங்களுக்குப் பொறுப்பாக உள்ளனர். அந்தந்த நிலையங்களுக்கு இவர்களே சகலவிதத்திலும் நிர்வாகிகளாக கடமையாற்றுகின்றனர். இவர்களுக்கு உதவியாக போதனாசிரியர் களும் பகுதிநேர போதனாசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1993ம் ஆண்டு இறுதியில் இறுதிப் பரீட்சை நடக்கும். முதல் 1 1/2 வருடத்திற்கு தமிழ்மொழியும் தொழில்சார் கல்வியும் சகல பயிலுனர்களும் கற்க வேண்டும். மிகுதி 1 1/2 ஆண்டு ஏனைய பாடநெறிகள் இடம்பெறுகின்றது.

இலங்கையில் ஆசிரியர் பயிற்சி வரலாற்றில் இது ஒரு புரட்சி கரமான செயற்பாட்டினைக் கொண்டுள்ளது.

**தொலைக் கல்வி என்பது கற்பித்தல் நடத்தைகள் யாவும் கற்றல் நடத்தைகளிலிருந்து பிரிந்து காணப் படும் ஒரு கல்வி முறையாகும்.**

கலாநிதி ரூனேஃபிலிங்க் (சுவீடன்)

**தீக்காயத்திற்கு முதலுதவி தண்ணீர்:**

தீயினால் காயம் ஏற்பட்டதும் குளிர்ந்த நீரால் புண் பட்ட இடத்தைக் கழுவுவது சிறந்த முதலுதவி என தில்லி யில் நடந்த தீக்காய உலகமாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. தீக்காயம் பட்டு ஆஸ்பத்திரியில் இறப்பவர்களில் 4ல் 3 பேர் பெண்கள், தீக்காயத்திற்கு உதவ நாடெங்கிலும் தோல் வங்கி (Skin Bank) நிறுவ வேண்டப்பட்டது. இறந்த 4 மணி நேரத்தில் அகற்றப்படும் தோல், 30 முதல் 40க்குட்பட்ட செல்சியஸ் வெப்பத்தில் 6 மாத காலம் பாதுகாக்கலாம்.

நன்றி: கலைக்கதிர்.



படிப்பகம்

padippakam

# அயல் நாடுகளில் கொந்தளிப்பு

## பாகிஸ்தான்

ஷியா- சுன்னத்வல் ஜமாஅத் மோதல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

முஸ்டான் நகரில் செவ்வாயன்று வீசப்பட்ட இரு கைக்குண்டுத் தாக்குதல்களினால் இருவர் கொல்லப்பட்டதோடு 13 பேர் காயமுற்றனர்.

தென் பஞ்சாப் மாகாண முஸ்டான் பள்ளிவாசலில் கூட்டமொன்றின் பின்னர் ஷியா முஸ்லிம்கள் உறங்கிக் கொண்டிருந்த போது இச்சம்பவம் நடைபெற்றது.

சுன்னத்வல் ஜமாஅத் முஸ்லிம்கள் ஒன்பது பேர் சில நாட்களுக்கு முன் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாக இது நடத்தப் பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

கடந்த வாரத்தில் ஒரு நாள் சுன்னத்வல் ஜமாஅத் அன்ஜுமான் சிபாஹ் இசபாஹ் தலைவர் குடும்பத்துடன் வீட்டுக் காம்பவுண்டில் உறங்கிக் கொண்டிருந்தபோது குண்டு வீசப்பட்டதால் காயமுற்றார். அதே தினத்தில் சுன்னத்வர் ஜமாஅத் லாஹிபர் கூட்டத்தில் குண்டு வீசப்பட்டதால் நால்வர் இறந்தனர்.

## கியூபா

சோவியத் தலைவர் கோர்பசோவ் கியூபாவிலிருந்து தமது துருப்புக்களை வாபஸ் பெறுவதாக அறிவித்ததைத் தொடர்ந்து கியூபாவில் கொந்தளிப்பு நிலவுகிறது. வழக்கம்போல் சோவியத் தலைவரின் அண்மைக்கால நடவடிக்கைகளை முந்திக்கொண்டு மகிழ்வுடன் வரவேற்கும் அமெரிக்கா இச்செயலையும் பராட்டியுள்ளது.

இந்நடவடிக்கை சோவியத் கியூபாவுக்கிடையில் உள்ள ஒரு உடன்படிக்கையை மதியாது சர்வதேச நடைமுறைகளை மீறும் செயல் என கியூபா ஆத்திரமடைந்துள்ளது.

மதன்



படிப்பகம்

padippakam

கம்யூனிசத்தைக் கைவிடுவதில்லையெனக் கூறும் கியூபா, சோவியத் ஜனாதிபதி கலந்தாலோசியாது பத்திரிகைப் பேட்டியில் முடிவெடுத்ததற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

### பிலிப்பைன்ஸ்

பிலிப்பைன்ஸின் 'சூபிக்' கடற்படைத்தளத்தை அமெரிக்கர்களுக்கு மீண்டும் குத்தகை கொடுக்கும் ஒப்பந்தத்தை செனட் சபை 12-11 வாக்குகளால் தோற்கடித்தது. சுமார் 15,000 பேர் ஒப்பந்தத்தை எதிர்த்து செனட் சபையை நோக்கி ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர்.

என்றுமில்லாதவாறு ஜனாதிபதி கொராஸன் அக்யுனோ ஒப்பந்தத்திற்கு ஆதரவாக சுமார் இரண்டு லட்சம் ஆதரவாளர்களுக்குத் தலைமை தாங்கி செனட் சபைக்குள் நுழைந்தார். மக்கள் வாக்கெடுப்பின் மூலம் இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்கிறார் அவர்!

### இந்தியா

வி. பி. சிங்கின் தேசிய முன்னணி ஆட்சி அழிய காரணமாக விளங்கிய 450 ஆண்டு பழமை வாய்ந்த பாபர் மசூதியைப் பாதுகாக்க லோக் சபை அங்கீகாரம் அளித்து விட்டது. 1947 இந்திய சுதந்திரத்தின் போது காணப்பட்ட வணக்க ஸ்தலங்களில் எவ்வித மாற்றத்தையும் உண்டு பண்ணுவதற்கும் தடைவிதிப்பதற்கான சட்ட மூலம் லோக் சபையில் இந்திரா காங்கிரஸ், தேசிய முன்னணி, அ. தி. மு. க. ஆதரவுடன் நிறைவேறியது.

காவியுடை தரித்த ஹிந்து பாரதீய ஜனதாக் கட்சி அங்கத்தவர்கள் சட்டமூலத்தின் நகலைக் கிழித்தெறிந்துவிட்டு சபையிலிருந்து வெளியேறினர்.

மசூதியை அழித்து ராமர் கோவிலைக் கட்ட வேண்டுமென்ற தகராறு காரணமாகக் கடந்த 2 வருடங்களில் 2000க்கும் மேற்பட்ட இந்துக்களும் முஸ்லிம்களும் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### இங்கிலாந்து

வட இங்கிலாந்தில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கடைகளைக் கொள்ளையடிப்பதிலும் கட்டிடங்களுக்குத் தீ மூட்டுவதிலும் பொலீஸாருக்குக் கல்லெறிவதிலும் ஈடுபட்டனர்.

வாகனமொன்றைத் திருடிச் சென்றவர்களைப் பொலிஸ் வாகனம் துரத்திய போது விபத்தில் அவர்கள் கொல்லப்பட்டமைக்கு வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கையாகவே மேற்படி சம்பவங்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.



படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

Registered as a News Paper in Sri Lanka. விலை ரூபா. 5-00

# எழுத்தாளர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

உங்கள் சிறுகதை

கட்டுரை

கவிதை

துணுக்குகளை எழுதி

கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புங்கள்.

ஆசிரியர்,

கொந்தளிப்பு,

88/2, டன்பார் வீதி,

அட்டன்.

தொலைபேசி: 0512-332

இப் பத்திரிகை கி. தொ. ஒ. செயலாளருக்காக அட்டன் யுனிவர்சல் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்